விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram WESTERN UNION WU Ria
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1052)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 20 திங்கட்கிழமை (04.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 016

## இனந்தெரியாத கும்பல் வீட்டின் மீது தாக்குதல்



### கொக்குவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
கொக்குவில் பூநாறி மடம் 19

## ஐ.நாவுக்கு ஒரு தெளிவான செய்தியை வழங்க முடிவு

### கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

(வவுனியா)
உறுப்பு நாடுகள் மற்றும் மனித உரிமை பேரவை, அதன் ஆணையாளர் ஆகியோருக்கு தெளிவான ஒரு செய்தியை வழங்க வேண் 19

### தமிழர் தரப்பு ஜெனிவா விடயங்களை கையாள்வதற்கான

# வரைபு ஒன்றை தயாரிப்பதற்காக மூவர் அடங்கிய குழு நியமிப்பு



(வவுனியா)
தமிழர் தரப்பு தொடர்பான ஜெனிவா விடயங்களைக் கையாள்வதற்கான வரைபைத் தயாரிக்க சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரை உள்ளடக்கிய மூன்று பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா விடயங்களை எவ்வாறு கையாள்வது தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டம் வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று மதியம் தொடக்கம் மாலை வரை நடைபெற்றது.

குறித்த ஆலோசனைக் குழுக் 19

## கிளிநொச்சியில் ஒருவருக்கு கொரோனா

(குப்பிழான்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 19

## நுணாவிலில் விபத்து; நால்வர் படுகாயம்



(சாவகச்சேரி)
சாவகச்சேரி - நுணாவில் 19

## இரவு தபால் ரயில் சேவையை மீள ஆரம்பிக்கத் தீர்மானம்

### ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
அனைத்து ரயில் பாதைகளிலும் ஈடுபடும் ரயில் சேவைகள் இன்று முதல் அதிகரிக்கப்படும். தூர பிரதேச ரயில் சேவை ஆரம்பிக்கப்படாது.

இருப்பினும் இரவு தபால் ரயில் சேவை 19

## நாட்டில் நேற்றும் 403 பேருக்கு தொற்று

(கொழும்பு)
நாட்டில் நேற்று மட்டும 403 பேருக்கு 19

## வீர வசனம் பேசி இலங்கையை ஐ.நா பொறிக்குள் சிக்க வைக்காதீர்கள்

### அரசை எச்சரிக்கிறது சஜித் அணி



(கொழும்பு)
"வீர வசனங்கள் பேசி சர்வதேச விசாரணைப் பொறிக்குள் இலங்கையைச் சிக்கவ்வக்க வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக் கொள்கின்றோம்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் 19

## 2 கொரோனாவால் பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் கொரோனாத் தொறறுக்கு உள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 19

## இந்தியக் கடலில் தத்தளித்த வடக்கு மீனவர்கள் மூவர் இந்திய மீனவர்களால் மீட்பு

(இராமேஸ்வரம்)
தமிழகத்தின் நாகை மாவட்டம் வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் கடல் பகுதியில் படகு பழுதடைந்த நிலையில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த குருநகர், ஊர்காவற்றுறை, பூநகரி ஆகிய பகுதி 19



## கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத் தயார்

### கருணா அறிவிப்பு

7ஆம் பக்கம் பார்க்க

## இந்த ஆண்டின் முதலாவது பாராளுமன்றம் நாளை கூடுகிறது

(கொழும்பு)
2021ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு நாளை 05 ஆம் திகதி கூடவுள்ளது.

இதன்போது பாராளுமன்ற அறிக்கையிடலுக்காக மீண்டும் ஊடகவியலாளர்கள் பாராளுமன்ற கட்டடத் 19

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி துஷ்யந்தி தேவமனோகரன்
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
**பொன்னம்பலம் சுப்பையா**
((இளைப்பாறிய ஆசிரியர்))

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா / யாழ். இந்து மகளிர் கல்லூரி

(C-1090)

# மாகாண முறைமை தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது

## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்கு முன்னர் புதிய அரசியல் அமைப்பின் முதலாவது வரைபை அரசாங்கம் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், மாகாண சபை முறைமைக்கு என்ன செய்வது என்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மாகாண சபை முறைமை நீக்கப்படுமா அல்லது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது குறித்து விமர்சனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து வினவிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர்மேலும் கூறுகையில், மாகாண சபை முறைமை அவசியமா இல்லையா என்பது குறித்து அரசாங்கத்தில் கருத்து, மாற்றுக் கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த விடயம் குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. எனினும் எதிர்க்கட்சியினர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் இன்று மாகாண சபை தேர்தலை சாட்டாக வைத்துக்கொண்டு விமர்சனக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். எனினும் கடந்த ஆட்சிக் காலத்தில் மாகாண சபை தேர்தலை நடத்தாது ஆட்சியை தக்கவைக்க பல சூழ்ச்சிகளை செய்தனர்.

மாகாண சபைகள் இன்று காலாவதியாகியுள்ளமைக்கு முன்னைய அரசாங்கமும் அவர்களுக்கு துணை நின்ற தமிழ், முஸ்லிம் கட்சிகளுமே காரணமாகும்.

வடக்கு தமிழ் மக்கள் இன்று நெருக்கடியை சந்திக்கவும், கிழக்கில் முஸ்லிம் மக்கள் நெருக்கடியை சந்திக்கவும் முன்னைய ரணில் -மைத்திரி ஆட்சியை ஆதரித்து அவர்களுக்கு துணை நின்றவர்களே காரணம்.

எது எவ்வாறு இருப்பினும் இன்று நாம் மக்கள் ஆட்சியை உருவாக்கி இந்த நாட்டிற்கு ஏற்ற சட்ட திருத்தங்கள் குறித்து கவனத்தில் கொண்டு அதற்கமைய தீர்மானங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்றார். (ஞா)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**புஸ்பராணி செல்வநாதன்**

அண்டு ஒன்று ஆனதம்மா
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா
ஆனந்தமாய் வாழ நீ வேண்டுமம்மா - எனக்கு

தோற்றம் 24.03.1959
மறைவு 04.01.2020

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

மகன்
S.T. குமரன்

(C-1084)


# தனிமைப்படுத்தலிலிருந்து சில பகுதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

நாட்டில், தனிமைப்படுத்தல் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்த சில பகுதிகள் விடுவிக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

வனாத்தமுல்ல, தமிழ்நாடு, பேலியகொடவத்தை, மீகஹவத்தை, ரோஹன விஹாரமாவத்தை, நள்ளிக ஹவத்தை, பூரணகொட்டுவத்தை, ஸ்ரீ ஜயந்தி மாவத்தை ஆகிய பகுதிகள் இன்று காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ஞா)

# மரண அறிவித்தல்



## செல்லத்துரை உதயகுமார் (குமரன்ஸ்)

(முல்லைத்தீவு அறிவு வைரவர் வர்த்தக நிலைய உரிமையாளரும் முல்லைப்பட்டின முன்னைநாள் பிரபல வர்த்தகரும்)

**பிறப்பு : 1962.12.08 இறப்பு : 2021.01.03**

சில்வா வீதி, வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் P.W.D வீதி, முல்லைப்பட்டிணம், முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை உதயகுமார் (குமரன்ஸ்) நேற்று (03.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - ராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் திலகேஸ்வரியின் (ஆசிரியர் - மு/கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ) பாசமிகு கணவரும் வித்தியா, கோபினி (கிராமசேவகர் - செல்வபுரம்), நித்தியா (கிழக்குப் பல்கலைக் கழகம்), திவ்யா, மிதுஷன் (முல்லைத்தீவு ம.வி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹருவரன், சாள்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கமலேஸ்வரி (வட்டக்கச்சி), காலஞ்சென்ற பாக்கியநாதன், வசந்தாதேவி (கனடா), இரத்தினம் (செம்மலை), நாகரத்தினம் (குஞ்சு - வவுனியா), செல்வராணி (முல்லைத்தீவு), சண்முகநாதன் (கனடா), ராஜகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.01.2021) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முல்லைத்தீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


P.W.D வீதி,
முல்லைப்பட்டிணம், முல்லைத்தீவு.

077 920 1957

(C-1091)

தகவல்:
குடும்பத்தினர்

# ரத்ன தேரருக்கு எதிரணியில் ஆசனம்



(கொழும்பு)

எமது மக்கள் சக்தி கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அத்துரலியே ரத்ன தேரருக்கு பாராளுமன்றத்தில் எதிரணியின் முதல் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எமது மக்கள் சக்தி கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கடந்த 18 ஆம் திகதி ரத்ன தேரர் நியமிக்கப்பட்டார்.

அதன் பிரகாரம் சபையில் அவருக்கு எதிர்க்கட்சியில் முதலாவது வரிசையில் 20 ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. (ஜ-4)

# 3 ஆயிரத்து 736 பேர் யாழில் தனிமைப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 1305 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 736 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் இது வரை 160 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில் குறித்த தொற்றாளர்களுடன் நேரடியாக தொடர்புகளை பேணியதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் தற்போது வரை 1305 குடும்பங்களை சேர்ந்த 3736 நபர்கள், சுய தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

யாழில் கொரோனா தொற்றுக்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 28 பேர் வீடு திரும்பியுள்ளதாக தெரிவித்த அரச அதிபர் எனினும் யாழ் மாவட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படுவதன் மூலம் மேலும் தொற்று பரவலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-5-33)

# முதலாம் தர மாணவர்களை இணைத்துக்கொள்ளல் அடுத்த மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

முதலாம் தரத்திற்கான மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில், முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வை, அடுத்த மாதம் நடத்த திட்டமிட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஜ-4)

# ஊழியர் சேமலாப நிதி செலுத்தாமை; நீதிமன்றில் 16 ஆயிரம் வழக்குகள்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி செலுத்தாமை தொடர்பில் 16 ஆயிரத்துக்கும் அதிக வழக்குகள் நீதிமன்றில் குவிந்திருக்கின்றன. அதனால் இந்த வழக்குகளை தொழில் நியாயாதிக்க சபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

மலர்ந்திருக்கும் புதுவருடத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள இருக்கின்றோம். நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் ஊழியர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலே இந்த திருத்தத்தை மேற்கொள்ளவுள்ளோம்.

அத்துடன் எந்தவொரு நிறுவனத்துக்கும் சேவைக்காக இணைந்துகொள்ளும் ஊழியரை, குறிப்பிட்ட காலத்துக்குள் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்தலை கட்டாயமாக்கும் சட்டம் ஒன்றையும் இந்த திருத்தத்தில் உள்வாங்க இருக்கின்றோம் என்றும் அவர் கூறினார். (ஜ-4)



# அரச மற்றும் தனியார் ஊழியர்களுக்கு அறிவிப்பு



(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறை பணியாளர்களை வாரத்தில் ஒரு நாள் பத்திக் மற்றும் கைத்தறி ஆடைகளை அணிந்து பணிக்குச் செல்லுமாறு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கமைய, வெள்ளிக் கிழமைகளில் பத்திக் மற்றும் கைத்தறி ஆடைகளை அணியுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இந்த விடயம் குறித்த சுற்றறிக்கை எதிர்வரும் காலத்தில் பொதுச்சேவைகள் அமைச்சின் மூலம் வெளியிடப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அண்மையில் உள்நாட்டு ஆடை உற்பத்தியை பாதுகாக்கும் வகையில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஆடைகளுக்கு விசேட வரியொன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நிச்சயமாக மாகாணசபை தேர்தல் நடத்தப்படும்

## திலீபன் உறுதி

(நெளுக்குளம்)

நிச்சயமாக மாகாணசபை தேர்தல் நடத்தப்படும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான கு. திலீபன் தெரிவித்தார்.

நேற்று வவுனியா கருப்பனிச்சான் குளத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

மாகாணசபை தேர்தல் விரைவில் நடைபெற வேண்டும் என்பது தான் எங்களது கட்சியின் நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்தார். (ஜ-5-299)

# 6 வகை பயிர்களில் தன்னிறைவு அடைய முடியும்-விவசாய திணைக்களம்

(கொழும்பு)

சோளம் உள்ளிட்ட 6 வகை பயிர்களில் இந்த வருடத்தில் தன்னிறைவு அடைய முடியும் என விவசாய திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. சோளம், மரமுந்திரிகை, எள்ளு, கௌபி, பாசிப்பயறு மற்றும் வெங்காயம் போன்ற பயிர்களின் அறுவடையானது இம்முறை உள்நாட்டின் தேவைக்கு போதுமானது என விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டபிள்யூ.எம். வீரகோன் தெரிவித்துள்ளார்.

பெரும்போகம் மற்றும் சிறுபோகத்தில் இவை உற்பத்தி செய்யப்படுவதுடன் உற்பத்தியின் அளவை மேலும் அதிகரிப்பதனூடாக இந்த செயற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# குணமடைந்தோர் 37 ஆயிரத்து 717

(கொழும்பு)

கொரோனா தொற்றில் இருந்து மேலும் 535 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வீடுகளுக்கு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆயிரத்து 717 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

நாட்டில் இதுவரையில் 44 ஆயிரத்து 371 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 211 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# நாட்டை வந்தடைந்தது இங்கிலாந்து அணி

இலங்கையுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக ஜோ ரூட் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணியானது நேற்று நாட்டை வந்தடைந்துள்ளது.

வந்தடைந்த இங்கிலாந்து அணியினர் அம்பாந்தோட்டையில் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

ஒரு குறுகிய தனிமைப் படுத்தல் நடவடிக்கைக்கு பின்னர் இங்கிலாந்து அணியானது அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

கொவிட்-19 தொற்று நோயால் 2020 மார்ச் மாதத்தில் தொடர் ஒத்தி வைக்கப்பட்டதையடுத்து மறுசீரமைக்கப்பட்ட சுற்றுப்பயணத்திற்கான உயிர் பாதுகாப்பு மற்றும் பயணத் திட்டங்களுக்கு இரு நாட்டு கிரிக்கெட் நிர்வாகங்களும் கடந்த மாதம் ஒப்புக் கொண்டன.

இந் நிலையிலேயே இங்கிலாந்து அணியினர் இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளனர். (4)

# நியூசிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் பாகிஸ்தான் 297 ரன்களுக்கு ஓல் அவுட்

நியூசிலாந்து அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 297 ரன்கள் எடுத்தது.

டொஸ் வென்ற நியூசிலாந்து கப்டன் வில்லியம்சன் பந்து வீச்சை தேர்வு செய்தார். நியூசிலாந்து வீரர்களின் அபாரமான பந்துவீச்சால் பாகிஸ்தான் திணறியது. 83 ரன் எடுப்பதற்குள் 4 விக்கெட்டை இழந்தது.

தொடக்க வீரர் ஷான் மசூத் ரன் எதுவும் எடுக்காமல் சவுத்தி பந்தில் ஆட்டம் இழந்தார். மற்றொரு தொடக்கவீரர் ஆபித் அலி (25 ரன்), ஹாரிஸ் சோகைல் (ஒரு ரன்), பவாத் ஆலம் (2 ரன்) ஆகியோரது விக்கெட்டை ஜேமிசன் வீழ்த்தினார்.

5ஆவது விக்கெட்டான அசார் அலி- கப்டன் முகமது ரிஸ்வான் ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது. சிறப்பாக ஆடிய ரிஸ்வான் 61 ரன்னில் வெளியேறினார். அவரது விக்கெட்டையும் ஜேமிசனே கைப்பற்றினார்.

அடுத்து பஹீம் அஸ்ரப் களம் வந்தார். மறுமுனையில் இருந்த அசார் அலி தொடர்ந்து சிறப்பாக ஆடினார். தேநீர் இடைவேளையின்போது பாகிஸ் தான் 5 விக்கெட் இழப்புக்கு 218 ரன் எடுத்தது. அசார் அலி 90 ரன்னிலும், அஸ்ரப் 26 ரன்னிலும் களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து மீண்டும் களமிறங்கிய பாகிஸ் தான் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறி கொடுத்தது. 83.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 297 ரன்கள் எடுத்தது.

நியூசிலாந்து அணி தரப்பில் ஜெமிசன் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

சவுத்தி, போல்ட் தலா 2 விக்கெட்டுகளையும் ஹெண்ட்ரி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (4)

# விவசாயியாக மாறிய டோனி

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் டோனி முழு நேர விவசாயியாகவே மாறியுள்ளார்.

தனது பண்ணை வீட்டில் உள்ள 40 முதல் 50 ஏக்கர் வரையிலான விவசாய நிலத்தில் இயற்கை முறைப்படி, பப்பாளி மற்றும் வாழை உள்ளிட்டவற்றை பயிரிட்டு வளர்த்து வந்தார்.

அதுமட்டுமன்றி இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட உரத்தின் மூலமே தனது இடத்தில் விவசாயம் செய்து வருகிறார். தனது தோட்டத்தில் அந்த உரம் தரும் விளைச்சலைப் பொறுத்து, அதனை அனைத்து விவசாயிகளுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் உர விற்பனையை டோனி தனது தரப்பிலிருந்து தொடங்கவுள்ளார்.

மேலும், அண்மையில் உழவியந்திரம் ஒன்றை டோனி ஓட்டிய வீடியோ வெளியானது.




அத்துடன் செயற்கை பூச்சிக் கொல்லி மருந்துகளில் இருக்கும் ஆபத்து குறித்தும், இயற்கை விவசாயத்தின் நன்மை குறித்தும் டோனி விளக்கியிருந்தார்.

இந்நிலையில், தற்போது டோனி தனது பண்ணை வீட்டில் பயிரிட்டிருந்த பயிர்கள் விளைச்சல் கொடுக்க தொடங்கியுள்ளன. தக்காளி, முட்டை கோஸ், பீன்ஸ் உள்ளிட்ட பல வேறு காய்கறிகளை டோனி இயற்கை முறையில் விளைவித்துள்ளார். அவர் விளைவித்த இந்தக் காய்கறிகளை டுபாய்க்கு ஏற்றுமதி செய்வதற்கு ஜார்க்கண்ட் அரசு முன் வந்துள்ளது. தங்களது வேளாண்மைத் துறை மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# ஒலிம்பிக்கில் பதக்கம் பெற கடுமையாக உழைக்கிறேன்

## பி.வி.சிந்து



தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ள பி.வி.சிந்து டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கம் பெற கடுமையாக உழைப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னணி பட்மின்டன் வீராங்கனை பி.வி.சிந்து. உலக தரவரிசை பட்டியலில் அவர் 7-வது இடத்தில் உள்ளார்.

ஐதராபாத்தை சேர்ந்த 25 வயதான பி.வி.சிந்து தற்போது இங்கிலாந்தில் தங்கியுள்ளார். இந்த ஆண்டு டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்காக அவர் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாக பி.வி.சிந்து கூறியதாவது:- ஒலிம்பிக் போட்டிக்கு நான் நன்றாக திட்டமிட்டுள்ளேன். பதக்கத்தை பெற எல்லோரும் 100 சதவீதம் கடினமான உழைப்பை கொடுக்கவே விரும்புவார்கள்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் பதக்கம் பெறுவதை நான் ஆவலுடன் விரும்புகிறேன். அதற்காக கடுமையாக உழைக்கிறேன். இது எளிதானதல்ல என்று எனக்கு தெரியும் என அவர் கூறினார்.

ஒலிம்பிக் போட்டிக்கு முன்னதாக நடைபெறும் அனைத்து சர்வதேச போட்டிகளிலும் அவர் பங்கேற்கிறார். தாய்லாந்து ஓபன் பட்மின்டன் போட்டி எதிர் வரும் 12 ஆம் திகதி நடைபெறுகிறது. இதில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

பி.வி.சிந்து 2016 ஆம் ஆண்டு பிரேசிலில் உள்ள ரியோடி ஜெனிரோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். அவர் மயிரிழையில் தங்கப் பதக்கத்தை இழந்தார். டோக்கியோ ஒலிம்பிக்கிலாவது தங்கப் பதக்கத்தை வெல்ல வேண்டும் என்ற இலக்கில் உள்ளார்.

கடந்த ஆண்டு பாசல் நகரில் நடந்த உலக சம்பியன் போட்டியில் அவர் தங்கப்பதக்கம் பெற்றார். இதனால் மிகுந்த நம்பிக்கையுடன் ஒலிம்பிக் போட்டியில் விளையாடுவார். (4)

# ஆஸி. சென்ற இந்திய அணியின் 5 வீரர்கள் தனிமைப்படுத்தலில்

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியில் ரோஹித் சர்மா, ரிஷாத் பந்த், சுப்மான் கில், பிரித்வி ஷா மற்றும் நவ்தீப் சைனி ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணியானது அவுஸ்திரேலிய அணியுடன் இருபது -20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடி வருகிறது.

இவ்விரு அணிகள் இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமாகவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதால், இரு அணி வீரர்களும் உயர் பாதுகாப்பில் இருக்கின்றனர், இதனால் அவர்களுக்கு வெளியில் செல்வது தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் புத்தாண்டு தினத்தையொட்டி இந்திய வீரர்கள் ரோஹித் சர்மா, ரிஷப் பந்த், சுப்மான் கில், பிரித்வி ஷா மற்றும் நவ்தீப் சைனி ஆகிய 5 பேர் உயர் பாதுகாப்பு விதிகளை மீறி ஒரு ஹோட்டலுக்குச் சென்று உணவு சாப்பிட்டு புத்தாண்டைக் கொண்டாடினர் .

இதன்போது அங்கு வந்த இந்திய ரசிகர் ஒருவர் இந்திய வீரர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து செல்பி எடுத்துச் சென்று அந்தப் புகைப்படத்தையும் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கு அவுஸ்திரேலிய ஊடகங்கள் கடும் கண்டனம் தெரிவித்தது.

இவ்வாறாதொரு நிலையிலேயே புத்தாண்டு தினத்தையொட்டி கொரோனா விதிமுறைகளை மீறி ஹோட்டலுக்கு சென்று அங்கு உணவருந்தியமைக்காக அவர்கள் மருத்துவக் குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக பி.சி.சி.ஐ. மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் ஆகியவை விசாரணை நடத்தி வருகின்றன. (4)

# "பதிவு நீதிபதி" உருவாக்கம்

(கொழும்பு)
நீதிமன்ற விசாரணைகளுக்கு முன்னதாக ஒரு முன் விசாரணைக்காக "பதிவு நீதிபதி" என்று அழைக்கப்படும் புதிய நிர்வாக நிலையை உருவாக்க நீதி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்த நிலை தற்போதுள்ள நீதிமன்ற பதிவாளர் பதவிக்கு உயர்ந்ததாக இருக்கும். அத்துடன்நீதிச்சேவைகள் ஆணைக் குழுவின் கீழ் கொண்டு வரப்படும்.

"பதிவு நீதிபதி" என்ற நிலை அனைத்து நீதிமன்றங்களிலும் உருவாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இந்தப் பதவிக்கு அதிகாரங்களை வழங்குவதற்காக நீதித்துறை சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று நீதியமைச்சின் செயலாளர் பியுமந்தி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வழக்குகளை விசாரிப்பதற்கான நிர்வாக ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பொறுப்பான இந்தப் பதவிக்காக நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை நியமிக்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதன்படி இந்த அதிகாரி ஆவணங்கள் ஊடாக சென்று வழக்குகளை விசாரணைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

வழக்குகளின் விசாரணையின் தாமதத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது நீதியமைச்சை மேற்கோள் காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஜ-4)

# கைக்குண்டுடன் ஒருவர் கைது

(கொழும்பு)
வெல்லம்பிட்டி - சிங்கபுர பகுதியில் கைக்குண்டு மற்றும் கூரிய ஆயுதத்துடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேக நபர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 11 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்றும், இவருக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கியதாக மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றும், அபாயகரமான கூரிய ஆயுதங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)

## பிள்ளைகள் பிறக்கும் போதே தேசிய அடையாள அட்டை இலக்கம்

(கொழும்பு)
பிள்ளைகள் பிறக்கும் போதே தேசிய அடையாள அட்டை இலக்கம் வழங்கப்படவுள்ளது.

அந்த இலக்கம் 18 வயது முழுமையடைந்த பின்னர் வெளியிட வேண்டும் என அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் இது தொடர்பில் யோசனை ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்களினால் கருத்திற்கொள்ள வேண்டிய 7 விடயங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த விடயத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. (ஜ-4)

## சாரதிகள் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)
நாட்டுக்கு வருகைதந்துள்ள உக்ரேய்ன் நாட்டு சுற்றுலாப் பயணிகளை, ஜால தேசிய சரணாலயத்துக்கு அழைத்து சென்ற ஜீப் சாரதிகள் 14 நாட்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

113 சுற்றுலாப் பயணிகளுடன் ஜால சென்றிருந்த 28 சாரதிகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 22.03.1933
மறைவு: 28.12.2020

எமது பாடசாலையின் சங்கீத பாட ஆசிரியை திருமதி **ஜெயக்காந்தன் சிவசக்தி** அவர்களின் அன்புத் தந்தையார்

**குழந்தைவேலு சிவமூர்த்தி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை


# ஜனாஸாவை அகற்றுமாறு ஊழியர்கள் எதிர்ப்பு

(கண்டி)
கண்டி தேசிய வைத்தியசாலையில் நீதிமன்ற வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்கள், நேற்று கடமையில் இருந்து விலகி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொவிட் தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம் இனத்தவரின் ஜனாஸா, கடந்த சில வாரங்களாக குளிரூட்டப்பட்ட அறையில் வைக்கப்பட்டுள்ளமை சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவித்து உடனடியாக அதனை அங்கிருந்து அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி இவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். (ஜ-4)

# சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)
இராணுவச்சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

கொஸ்கம இராணுவமுகாமில்இணைத்துக் கொள்ளப்பட்ட இவர் குறித்த முகாமினுள் வைத்து தனது கடமைக்கு பயன்படுத்தும் துப்பாக்கியைப் பிரயோகித்து இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

உயிரிழந்த இராணுவச் சிப்பாய் 19 வயதுடைய மொரவக்க - களுபோவிட்டியன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் தெரியவில்லை எனவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஜ-4)




அரச சார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பிற்கு எதிராக கிளிநொச்சியில் எதிர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சியில் குறித்த போராட்டத்தில் பொது அமைப்புக்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் என்பலரும் கலந்து கொண்டனர். (100-316)


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27 - 01 - 1945
இறப்பு 17 - 12 - 2019

அமரர்.திருமதி
**திருவருட்செல்வம் நாகேஸ்வரி**

நேற்று நடந்தது போலிருக்கின்றது
காற்றாய் பறந்தது ஆண்டு ஒன்று
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களுடன் நிலைத்திருக்கும்
கண்ணியமாய் வளர்த்து வாழ
வழி வகுத்து வைத்துள் நாம்
நல்வாழ்வு வாழ
வழிகாட்டிய எம் அன்புத் தெய்வம் அம்மா
அழியா உங்கள் நினைவுகளுடன் வாழும் நாம்

இல.61, கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.

குடும்பத்தினர்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

(3169)

# யாழ்.மாவட்ட செயலகத்தில் கொரோனா தொடர்பான விசேட கலந்துரையாடல்

(நல்லூர்)

யாழ் மாவட்ட கொரோனா நிலைமை தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவலை எவ்வாறு கட்டுப்படுத்தல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியும், மாவட்ட கொரோனாக் கட்டுப்பாட்டு அதிகாரியுமான மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் மாவட்டம் தோறும் கொரோனா கட்டுப்பாட்டு அதிகாரிகளாக இராணுவத்தின் உயர் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் தற்போதைய நிலையில்மேலும்கொரோனாப் பரவலை எவ்வாறு தடுக்க முடியும் என்பது தொடர் பில் ஆராயும் விசேட கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கூட்டத்திற்கு பிரதேச செயலாளர்கள், சுகாதார திணைக்கள பணிப்பாளர், பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். (5-4-33)

# சாந்தி, சமாதானம் வேண்டி பலாலியில் பிரித் ஓதும் ஆராதனை

(நல்லூர்)



இலங்கை விமானப் படைத் தளபதி ஏயார் மார்சல் சுதர்சன பதிரண ஆலோசனைக்கு அமைய விமானப்படையின் பிரித் ஓதும் ஆராதனை நிகழ்வு நேற்று நாடு பூராகவும் உள்ள விமானப்படைத் தளங்களில் மேற்கொள்ளப்பட்டது.

புதிய வருடப் பிறப்பினை முன்னிட்டும், நாட்டிலுள்ள மக்களுக்கு சாந்தி சமாதானம் நிகழ வேண்டும் என்றும் தற்போதுள்ள கொரோனா வைரஸ் தொற்று குறித்தும் பிரித் ஓதும் ஆராதனை முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைவாக நேற்று பலாலி விமானப் படைத் தலைமையகத்தில் பிரித் ஓதும் ஆராதனை பௌத்த பிக்குகளால் மேற்கொள்ளப்பட்டது.

பலாலி விமானப்படைத் தளத்தின் குறூப் கப்டன் ரசங்க சொய்சா தலைமையின் கீழ் குறித்த வைபவம் இடம்பெற்றது.

புனித தீபம் ஏற்றப்பட்டு பிக்குகள் அழைத்துவரப்பட்டு சமாதானம் வேண்டி குறித்த நிகழ்வுகள் நேற்று நள்ளிரவு இடம்பெற்றன. (5-4-33)



சுவிட்சர்லாந்து நாட்டில் வாழ்ந்து வரும் நேசக்கர அனுசரணையாளர் திருமதி - திருக்குமார் கலைச்செல்வியுத்தத்தில் கணவரை இழந்த குடும்பம் ஒன்றிற்கு கடைஅமைப்பதற்கும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கும் 40ஆயிரம் ரூபாவை மைக்கல் நேசக்கரம் ஊடாக வழங்கி வைத்தார். (படம்.மகாலிங்கம்)

# உலக சித்தமருத்துவ தின இணையவழிக் கருத்தரங்கு

(நல்லூர்)

உலக சித்த மருத்துவத் தினத்தை முன்னிட்டு அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் நடத்திய இணைய வழிக் கருத்தரங்கு நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, கிழக்கு பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஃப். சி. ராகல் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தியா - பாளையங்கோட்டை அரசசித்த வைத்திய மருத்துவக் கல்லூரியின் பொது மருத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் வைத்தியர் ஏ. மனோகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, "தொற்றா நோய்களும் சித்த வைத்தியமும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக சித்த வைத்தியத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் எஸ். சிவசண்முகராஜா "ஈழத்து சித்த மருத்துவ நூல்கள்" என்ற தலைப்பில் விசேட உரையாற்றினார்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த வைத்தியத் துறைத் தலைவர் வைத்தியர் திருமதி தயாளினி திலீபன், கிழக்கு பல்கலைக்கழக சித்த வைத்தியத் துறைத் தலைவர் வைத்தியர் என். வர்ணகுலேந்திரன், கிழக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் வைத்தியர் திருமதி ஆர்.ஸ்ரீதர், வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் வைத்தியர் திருமதி கே. ஜெப நாமகணேசன், அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் கே. சிவதரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

யாழ். பல்கலைக்கழக, கிழக்கு பல்கலைக்கழக சித்த வைத்தியத் துறைகளின் விரிவுரையாளர்கள், மாணவர்கள், சித்த வைத்தியர்கள் உட்படப் பலர் இந்த இணைய வழி நிகழ்வில் கலந்து கொண்டனர். (5-4-33)

# இணுவில் பகுதியில் மோ.சைக்கிள் திருட்டு

(குப்பிழான்)

இணுவில் வன்னியசிங்கம் வீதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் இரண்டு இலட்சம்ரூபா பெறுமதியான பல்சர்ரக மோட்டார்சைக்கிள் நேற்று முன்தினம்சனிக்கிழமை இரவு 9மணியளவில் இனந் தெரியாதோரால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் வீட்டின் முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டிற்குள் சென்று உணவருந்தி விட்டு மீண்டும் வருவதற்குள் சுமார் 15 நிமிட இடைவெளியில் குறித்த மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் இணுவில் இளைஞர்கள் இணைந்துதேடுதல் மேற்கொண்ட போதும் திருட்டுப் போன மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதேவேளை, குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (5-4-18)

# 6 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக 13 குற்றச்சாட்டுக்கள் முன்வைப்பு

(கரணவாய்)



பருத்தித்துறை சுகாதார பிரிவினரின் அதிரடி நடவடிக்கையால் 6 வர்த்தக நிலையங்களுக்கு 13 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறைப் பகுதியில் உணவு கையாளும் நிலையங்களின்மீது சுகாதார பரிசோதகர்கள் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த நிலையில் உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

பொது மக்களின் தகவல்களுக்கமைய பருத்தித்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் குழுவினர் குறித்த பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவு விநியோக வாகனங்கள் மற்றும் நடமாடும் வியாபாரங்கள் தொடர்பான தமது திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட காலாவதியான மற்றும் நுகர்வதற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதோடு சட்டநடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இப்பரிசோதனையின்போது ஆறு வர்த்தக நிலையங்களுக்கு எதிராக13 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (5-4-60)



இணுவில் பொதுநூலக கனடா அமைப்புக் குழுவினரின் நிதி அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமூக நலத் திட்டத்தின் ஒரு கட்டமாகப் பயனாளிகளுக்கான வாழ்வாதார, கல்விக்கான கொடுப்பனவின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் இணுவில் பொதுநூலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது ஆறு பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# தமிழ்க் கட்சிகளுடனேயே மாகாணசபைத் தேர்தல்களை சந்திப்பேன்

## கருணா திட்டவட்டம்




(முறிகண்டி)

தேசிய கட்சிகளுடன் இல்லை. தமிழ்க் கட்சிகளுடனேயே மாகாண சபை தேர்தல்களை சந்திப்பேன் எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் இணைய தயாராக உள்ளதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

எமது கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை பலப்படுத்துவதற்காக கிளிநொச்சியில் முக்கிய சந்திப்புக்களை ஏற்பாடு செய்துள்ளோம். உண்மையில் கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு அம்பாறை மாவட்ட மக்கள் ஆதரவு வழங்கி இருந்தார்கள்.

இந்நிலையில் எமது கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ளது.

அதனை பலப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருவதாக தெரிவித்தார்.

உண்மையில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட உள்ளோம். அதற்கான வேட்பாளர்களையும் தெரிவு செய்துள்ளோம்.

ஆனால் தேசிய கட்சியுடன் இணைந்து அல்ல. தமிழ் கட்சிகளுடன் இணைந்தே போட்டியிட தீர்மானித்துள்ளோம்.

தமிழ் கட்சிகளுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அனைவரையும் ஒன்றாக இணைத்து போட்டியிடுவது என்ற முடிவில் இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தலைமைகள் கடந்த கால செயற்பாடுகள், அரசியல்களை விட்டு தற்போது காணப்படும் சூழலை கருத்தில் கொண்டு ஒற்றுமையாக செயற்பட முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-5-100)

# கம்பஹா மாவட்டத்தில் 144 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 515 கொரோனா நோயாளர்களில் அதிகமானோர் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி கம்பஹா மாவட்டத்தில் 144 கொரோனா நோயாளர்கள் பதிவானதாக கொவிட்-19 கட்டுப்பாட்டு தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கு அடுத்த படியாக கண்டி மாவட்டத்தில் 96 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் அடையாளம்காணப்படும்நோயாளர்களின் எண்ணிக்கை யில் சடுதியான வீழ்ச்சியை காண முடிகிறது. (ஜ-4)

# மயங்கி விழுந்தவர் மரணம்

(கரணவாய்)

துவிச்சக்கர வண்டிக்கு காற்றடித்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்துள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஊறணி பொலிகண்டி மேற்கு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்து துவிச்சக்கர வண்டியில் புறப்படுவதற்காக காற்றடித்த போது அவர் மயங்கி விழுந்துள்ளார்.

அவரை உடனடியாக வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (5-4-60)

# கொக்கிளாய் களப்பில் தொடரும் புல்மோட்டை மீனவர்களின் அடாவடி

## ரவிகரன் குழுவினர் ஆராய்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்கிளாய் கடல்நீரேரியில், புல்மோட்டை மீனவர்கள் அத்துமீறி இயந்திரப் படகுகளில் வருகை தருவதுடன், சட்டவிரோத கூட்டுவலை போன்ற மீன்பிடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மீனவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் பகுதிமக்களை மீள்குடியமர்த்திய பத்து ஆண்டுகளுக்கு மேலாக இப்பிரச்சினை காணப்படுவதாகவும் இது தொடர்பில் உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் அப்பகுதிக்கு நேற்றையதினம் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அவரது குழுவினர் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-5-4)

# கத்திக்குத்தில் ஒருவர் காயம்




(கரணவாய்)

யாழில் கத்திக்குத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இக்கத்திக் குத்துச் சம்பவம் கரவெட்டி மேற்கில் இடம் பெற்றுள்ளது.

இக்கத்திக்குத்தில் காயமடைந்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-5-60)

# 150 அடி பள்ளத்தில் பாய்ந்த ஆட்டோ



(கொழும்பு)

நோட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரிவன்னெலிய பகுதியில் ஆட்டோ ஒன்று 150 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கினிகத்தேனையிலிருந்து நோட்டன் பிரிஜ் வந்த ஆட்டோ நேற்று முன்தினம் மாலை பாதையை விட்டு விலகி 150 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# துமிந்தவை விடுவிக்க வேண்டும்

## தேரர் வலியுறுத்து



(கொழும்பு)

துமிந்த சில்வா என்பவர் மக்கள் பிரதிநிதியாக சமூகத்திற்காகவும் குறிப்பாக வறிய மக்களுக்காகவும் பாரிய பணிகளை செய்த நபர் என்பதால், அவர் தொடர்ந்தும் சிறையில் இருக்க வேண்டியவர் அல்ல என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

இதனால், துமிந்த சில்வா தொடர்பாக ஏதேனும் நடைமுறையயை கையாள வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். இது சம்பந்தமாக அரசாங்கமும், சிறைச் சாலைகள் திணைக்களமும் கவனம் செலுத்த வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நடந்த தவறுகள் சம்பந்தமாக ஆராய்ந்து நீதியை நிறைவேற்றுவதாக தற்போதைய அரசாங்கம் வாக்குறுதி வழங்கியது.

இதனடிப்படையில் துமிந்த சில்வாவுக்கு நியாயம் நிறைவேற்றப்பட வேண்டும். சகல உயிர்களும் சுகமாய் வாழ பிரார்த்திப்போம் என்ற புத்தரின் போதனைக்கு அமைய செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

விஸ்வலிங்கம் மணிவண்ணன்
[ யாழ். மாநகர மேயர் ]



யாழ்.மாநகர சபையின் மேயராகப் பதவியேற்ற தாங்கள் மக்களுக்கு சிறந்த சேவை செய்து மக்களின் மனங்களை வென்ற நாயகனாய்த் திகழ வேண்டும் என வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(C-1089)

K.கோணேஸ்வரன்
நாவலடி, வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை.

## அரசியல் கைதிகளை விடுதலை செய்யாத அரசு

# “கைதிகளும் மனிதர்கள்” என்ற வசனத்தை சிறைச்சாலையிலிருந்து அகற்ற வேண்டும்

(பரந்தன்)

**கொலை செய்த இராணுவச் சிப்பாய்களை விடுதலை செய்யும் இந்த அரசாங்கம் ஏன் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கிளிநொச்சி கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பு மற்றும் மாண வர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அந் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலே தமிழ் அரசியல் கைதிகளாக இருக்கின்ற வர்களை இலங்கை அரசு விடுவிப்பதில் அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருகின்றது.

குறிப்பாக கொரோனா காலத்திலேயே பாரியளவில் அனைத்து அரசியல் கைதிகளும் பாதிப்படைந்திருக்கின்றனர்.

கொரோனா நோய் இருப்பது உறுதிபடுத்தப்பட்ட பலர் கந்தகாட்டுக்கு மாற்றப்பட்டுள்ளனர். சிலருக்கு வெலிக் கடை சிறைச்சாலையில் வைத்து மருத்துவ செயற்பாடுகள் இடம்பெறுவதாக நாங்கள் அறிகின்றோம்.

மிருசுவில் படுகொலை தொடர்பான இராணுவ சிப்பாய் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அத்துடன் ரவிராஜ் கொலை சம்பந்தமான இராணுவச் சிப்பாய் விடுவிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட கைதிகள் இன்றும் சிறைகளில் அடைக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இலங்கை அரசாங்கம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக எழுதி இருக்கின்ற “கைதிகளும் மனிதர்கள்” என்ற வாசகத்தை முதலிலே வெளியில் எடுக்க வேண்டும். அவர்களை இந்த அரசாங்கம் மனிதர்களாக மதித்திருந்தால் அந்தந்தக் கைதிகளும் மனிதர்கள்தான் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களை விடுதலைசெய்து இருக்கவேண்டும்.

அந்த விடுதலையை இந்த அரசாங்கம் நிராகரித்து இருப்பது மனித குலத்திற்கும் மனிதாபிமானத்திற்கும் எதிரான செயற்பாடு எனத் தெரிவித்தார். (5-4-312)

## விபத்தில் இருவர் காயம்

(நெளுக்குளம்)

பூந்தோட்டம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பாக தெரியவருகையில், பூந்தோட்டம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்த முதியவரை அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம் பெற்றது.


இதில் காயமடைந்த இருவரும் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-299)



**கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அலுவலகம் அரசாங்க அதிபர் க.விமலநாதனால் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டத்தின் தொழில் முயற்சியாளர்கள் என பலவேறு தரப்பட்டோர் கலந்து கொண்டனர்.**

(படம்-தவசீலன்)



**இராமநாதபுரம் அழகாபுரி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். புலம்பெயர் உறவுகளான அழகன் மற்றும் கலாவரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் 40 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன்,பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கஜன், வட்டார உறுப்பினர் சிவமோகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.**

# சுகாதாரப் பணி உதவியாளருக்கு தொற்று வைத்தியசாலையின் சில பகுதிகள் முடக்கம்

(குருமன்காடு)

பதவியா வைத்தியசாலையில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு நோயாளியை அழைத்து வந்த சுகாதாரப் பணி உதவியாளருக்கு கொரோனாத் தொற்று.

பதவியா வைத்தியசாலையில் இருந்து வவுனியா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் நோயாளி ஒருவரை அழைத்து வந்த சுகாதார பணி உதவியாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பதவியா வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார பணி உதவியாளர் ஒருவருக்கு கடந்த வியாழக்கிழமை பி.சி. ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

அதன் முடிவுகள் வராத நிலையில் பதவியா வைத்தியசாலையில் இருந்து நோயாளர் காவு வண்டி மூலம் நோயாளர் ஒருவரை குறித்த சுகாதார பணி உதவியாளர் அழைத்து வந்து வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை வெளியாகிய பி.சி.ஆர். பரிசோதனை முடிவில் பதவியாவில் இருந்து நோயாளியை அழைத்து வந்த குறித்த சுகாதாரப் பணி உதவியாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்ய ப்பட்டுள்ளது.

இதனையடுத்து பதவியா வைத்தியசாலையில் பலரை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வைத்திய சாலையின் சில பகுதிகளும் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வவுனியா வைத் தியசாலையின் சில பகுதிகளும் தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பதவியாவில் இருந்து வருகை தந்த நோயாளி மற்றும் சுகாதார பணி உதவியாளர் ஆகியோருடன் தொடர்புகளை பேணியவர்களையும் தனிமைப்படுத்த சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-5-250)

# பொலிஸார் சிரமதானப் பணி



(நெளுக்குளம்)

வவுனியா மரக்கறி மொத்த வியாபார சந்தையில் நேற்று சிரமதான ப்பணி முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பொலிஸாரின் ஏற்பாட்டில் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் க.இலங்கேஸ்வரனின் மேற்பார்வையில் வவுனியா மொத்த விற்பனை சந்தையை சூழ உள்ள பகுதிகளில் சிரமதானப் பணி இடம்பெற்றது.

குறித்த சிரமதானத்தில் பெருமளவான பொலிஸ் உத்தி யோகத்தர்கள், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டு துப்பரவுப் பணிகளில் ஈடுபட்டனர்.(5-4-299)

# இராசிபலன்

04.01.2021
மார்கழி 20, திங்கட்கிழமை
பஞ்சமி காலை 7.05 மணிவரை
சஷ்டி பின்னிரவு 5.17 மணி வரை
பூரம் முன்னிரவு 7.09 மணிவரை
சுபநேரம்-12.31-2.01 மணிவரை
இராகுகாலம்:-8.01-9.31 மணிவரை
சந்திராஷ்டமம்-அவிட்டம்,சதயம்

வளவன்

**மேஷம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** — சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** — பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,பொல்லாதவர்கள் உங்களை விட்டுவிலகுவர்,சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்ற முற்படுவீர்கள்,தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள் மனக்குழப்பம் அகலும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** — வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள்,எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், ஊர் மாற்றம் ,இட மாற்றம் என்பன ஏற்படலாம்.

**துலாம்** — பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,செல்வ நிலை உயரும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்** — உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு,தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**தனுசு** — வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், அரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** — உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்,தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** — தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.

**மீனம்** — உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு

கும்பலில் அறிவுரை ஒருபோதும் கூறாதே.

# கம்பஹாவில் வெடிப்பு சம்பவம் இந்தியப் பிரஜை உயிரிழப்பு

## இருவர் காயம்

(கொழும்பு)

கம்பஹா - கொட்ட தெனியாவ பகுதியில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவமொன்றில் இந்திய பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் இரண்டு இந்தியப் பிரஜைகள் காயமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொட்டதெனியாவ பகுதியிலுள்ள இரும்புத் தொழிற்சாலையொன்றின் கொதிகலனொன்று வெடித்துள்ளமை காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# பிரதமர் ஊடகப்பிரிவின் அறிவிப்பு

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என இந்த விடயம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுக்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்தி முற்றிலும் பொய்யானது என பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் இறுதிக் கிரியைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களின் ஆய்வு அறிக்கைகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும் குறித்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இதுவரையில் தெளிவுபடுத்தப்படவில்லை.

எனவே, கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் உயிரிழப்பவர்களின் உடலை அடக்கம் செய்யலாம் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்தி முற்றிலும் பொய்யானது என பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொவிட்-19 வைரஸ் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்பது தொடர்பில் ஆராய சுகாதார அமைச்சினால் 11 பேர் அடங்கிய விசேட நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டது. அத்துடன் மருத்துவ தரப்பினராலும் மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டது.

இவ்விரு குழுக்களின் அறிக்கைகள் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து இதுவரையில் கவனம் செலுத்தப்படவில்லை.

இந்த நிலையிலேயே, சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்தி முற்றிலும் பொய்யானது என்றும் வெகு விரைவில் அறிக்கையின் உண்மைத் தன்மை பகிரங்கப்படுத்தப்படும் என பிரதமரின் ஊடாக செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# 90 ஆயிரம் பேர் சுயதனிமைப்படுத்தல்

(கொழும்பு)

நாட்டில் ஏறத்தாழ 90 ஆயிரம் பேர் தங்களது இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண இதனை தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி, அவிசாவளை, ருவன்வெல்ல உள்ளிட்ட ஒன்பது பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள எந்த வொருநபரும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள், வெளியார் யாரும் அந்த பகுதிகளுக்குள் நுழைய அனுமதிக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஒரே நாளில் 9 பேர் பலி

(கொழும்பு)

ஒரே நாளில் வாகன விபத்துகளால் 9 பேர் உயிரிழந்துள்ளனரென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் 90 விபத்துகள் இடம் பெற்றுள்ளன.

அத்துடன், இவ்விபத்துகளால் 57 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# எந்த தேர்தலை நடத்தினாலும் அரசாங்கம் தோல்வியை சந்திக்கும்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் ஒத்திவைக்கவே அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கம் கட்டாயம் தோல்வியடையும் என்பது இரண்டு கருத்து கணிப்புகள் மூலம் உறுதியாகியுள்ளது. இதன் காரணமாக முடிந்தவரை தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் தயாராகி வருகிறது.

இதனால், மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்து விட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. சில உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது.

மக்களால் வாழ்க்கை செலவை தாங்கிக்கொள்ள முடியவில்லை. அத்தியாவசிய பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது.



வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டால் மாத்திரம் பொருட்களின் விலைகளை குறைக்கவோ, வாழ்க்கை செலவை கட்டுப்படுத்தவோ முடியாது.

இவ்வாறான நிலைமையில் எந்தத் தேர்தலை நடத்தினாலும் அரசாங்கம் தோல்வியடைவது உறுதியானது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# யுரேனியம் செறிவூட்டலை 20 வீதமாக அதிகரிக்கும் ஈரான்

டெஹ்ரான்

**போர்டோ நகரில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள அணு உலையில் 20 சதவீதம் யுரேனியத்தை செறிவூட்டும் பணியை மிக விரைவில் தொடங்க இருப்பதாக ஈரான் தற்போது அறிவித்துள்ளது.**

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக ஒபாமா பதவி வகித்த போது 2015-ம் ஆண்டு, அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய 6 வல்லரசு நாடுகளுடன் வரலாற்று முக்கிய த்துவம் வாய்ந்த அணுசக்தி ஒப்பந்தம் ஒன்றை ஈரான் செய்து கொண்டது.

அந்த ஒப்பந்தத்தில், அணு சக்தி எரிபொருளாக பயன்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை குறிப்பிட்ட அளவே ஈரான் கையிருப்பு வைத்திருக்க வேண்டும், அணுசக்தி மையங்களில் யுரேனியம் எரி பொருளை 3.67 சதவீதத்துக்கு மேல் செறிவூட்டக் கூடாது என் பவை முக்கிய விதிகள் ஆகும்.

இதனிடையே இந்த ஒப்பந்தம் அமெரிக்க நலன்களுக்கு எதிரானது என கூறிய ட்ரம்ப், கடந்த 2018 ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்டார்.

மேலும் ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளையும் விதித்தார். இந்த விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் கடும் மோதல் நிலவி வருகிறது.

இந்தநிலையில் அமெரிக்காவுடனான பதற்றத்துக்கு மத்தியில் அணுசக்தி ஒப்பந்தத்தில் கூறப்பட்ட 3.67 சதவீத அளவைத்தாண்டி, 20 சத வீதம் யுரேனியத்தை செறிவூட்டுவதற்கு வகை செய்யும் சட்ட மசோதா ஈரான் பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் போர்டோ நகரில் பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள அணு உலையில் 20 சதவீதம் யுரேனியத்தை செறிவூட்டும் பணியை மிக விரைவில் தொடங்க இருப்பதாக ஈரான் தற்போது அறிவித்துள்ளது.

ஈரானின் அணுசக்தி திட்டங்களை கண்காணித்து வரும் சர்வதேச அணுசக்தி நிறுவனமும் இதனை உறுதி செய்துள்ளது. (ஐ-4)

# இரு கிராமங்களில் தாக்குதல் 56 பேர் உயிரிழப்பு

(நைஜர்)

ஆபிரிக்க நாடான நைஜரின் இரு கிராமங்களுள் நேற்று முன்தினம் நுழைந்த துப்பாக்கி தாரிகள் சரமாரியாகச் சுட்டதில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

மாலி எல்லையுடனான மேற்கு நைஜரிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது. Tchombangou, Zarou mdareye ஆகிய கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக நைஜரின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இரு கிராமங்களிலும் 56 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு இது வரை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (ஐ-4)

# தடுப்பூசியை இலவசமாக வழங்கவுள்ள சீனா

(பீஜிங்)

சீனாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசியினை அந்நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில், சீனாவில் உருவாக்கப்பட்டுள்ள சினபோர்ம் தடுப்பூசியினை பொது மக்களுக்கு வழங்குவதற்கு நிபந்தனை அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இந்த நிலையிலே, குறித்த தடுப்பூசியினை இலவசமாக மக்களுக்கு வழங்குவதற்கு சீன அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த தடுப்பூசியானது 60-70% பாதுகாப்பானது என்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் என்றும் சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-4)

# பைசர் தடுப்பூசி போட்ட மருத்துவர் அரைமணி நேரத்தில் ஐ.சி.யுவில்

(மெக்சிகோ சிட்டி)

கொரோனா பாதிப்பை தடுக்க பைசர் தடுப்பூசி போட்டு கொண்ட பெண் மருத்துவர் ஒருவர் அரை மணிநேரத்தில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு உள்ளார்.



மெக்சிகோவில் வசித்து வரும் 32 வயது பெண் மருத்துவர் ஒருவருக்கு கொரோனா பாதிப்புகளை தடுக்கும் வகையில் பைசர் தடுப்பூசி செலுத்தப்பட்டது. ஆனால், அவரது உடல்நிலை மோசமடைந்து உள்ளது. இதனால் அவர் மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

இதுபற்றி அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், அந்த பெண் மருத்துவருக்கு பைசர் தடுப்பூசி போடப்பட்ட அரை மணிநேரத்தில் தசை பலவீனம் மற்றும் சுவாசக் கோளாறுகள் உள்ளிட்டவை ஏற்பட்டு உள்ளன என தெரிவித்துள்ளது.

இந்த பக்க விளைவுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அவருக்கு என் செபலோமைலிட்டிஸ் பாதிப்பு இருக்கக்கூடும் என கூறப்படுகிறது. சிகிச்சையை அடுத்து அவரது நிலை சீராக உள்ளது. (ஐ-4)

# இந்தியாவில் கொரோனா தடுப்பூசிகளின் அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதி

(டில்லி)

இந்தியாவில் சீரம் இன்ஸ்டியூட் ஒப் இந்தியா மற்றும் பாரத் பயோடெக் ஆகிய நிறுவனங்கள் தயாரித்துள்ள கொரோனா தடுப்பூசிகளின் அவசரகால பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனாவை கட்டுப்படுத்த கோவிஷீல்டு தடுப்பூசியை அவசர கால பயன்பாட்டிற்கு அனுமதிக்கலாம் என இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பின் நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது.

இதனையடுத்து கோவிஷீல்டு தடுப்பூசிக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்தது. இதே போல், பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் எனவும் நிபுணர் குழு பரிந்துரை வழங்கியது.


இதனையடுத்து, இந்த இரண்டு மருந்துகளின் தரம் மற்றும் பரிசோதனை விபரங்கள் தொடர்பாக மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு ஆய்வு செய்தது.

இந்தநிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள இந்திய தலைமை மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி, "கோவிஷீல்டு, கோவாக்சின் கொரோனா தடுப்பூசி மருந்துகளின் பரிசோதனை முடிவுகளை ஆய்வு செய்தோம்.

இந்த ஆய்வின் முடிவில் கோவிஷீல்டு, கோவாக்சின் கொரோனா தடுப்பூசிகளுக்கு இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது. அவசரகால பயன்பாட்டிற்கு இந்த மருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம்" என அவர் மேலும் கூறினார். (ஐ-4)

# பிழையை சுட்டிக்காட்டிய இளைஞருக்கு பரிசுத் தொகை வழங்கிய கூகுள்

கூகுள் செயலியில் பிழை கண்டுபிடித்தமைக்காக தமிழகத்தை சேர்ந்த இளைஞருக்கு கூகுள் நிறுவனம் பாராட்டி பரிசு தொகை வழங்கியுள்ளது.



உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக கூகுள் நிறுவனம் திகழ்ந்து வருகிறது. செயலிகள் முதல் தகவல் பரிமாற்ற முறை வரை அனைத்திலும் முக்கிய பங்கு வகித்து வரும் கூகுளில் பிழைகளை கண்டுபிடித்து சுட்டிக்காட்டுபவர்களுக்கு அந்நிறுவனம் சன்மானம் அளித்து பாராட்டி வருகிறது.

அந்தவகையில் கூகுள் செயலி ஒன்றில் பிழை கண்டுபிடித்தமைக்காக தமிழக இளைஞர் ஒருவருக்கு அந் நிறுவனம் பரிசு தொகை வழங்கியுள்ளது.

சென்னை ஆவடி பகுதியை சேர்ந்தவர் ஸ்ரீராம் கேசவன். பொறியியல் பட்டதாரியான இவர், கூகுளில் **'APPSheet'** எனப்படும் அப்ளிகேஷன் தயாரிப்பதற்கான செயலியில், வாடிக்கையாளரின் தகவல்கள் மற்றும் அவர்களின் படைப்புகள் திருடப்படுகிறது என்ற பிழையை கூகுள் நிறுவனத்திற்கு சுட்டிக்காட்டி அனுப்பியுள்ளார்.

அவரின் இந்த சேவையை அங்கீகரித்துள்ள கூகுள் நிறுவனம், அவருக்கு இந்திய மதிப்பில் சுமார் ரூ.2 இலட்சத்து 30 ஆயிரம் பரிசு தொகை வழங்கி பாராட்டியுள்ளது. (ஐ-4)

# 20 பயணிகளுடன் மாயமான படகு

## தொடரும் மர்மம்

(பஹாமாஸ்)

பஹாமாஸ் மற்றும் புளோரிடா இடையே உள்ள கடற்பகுதியில் 20 பேரை ஏற்றிச் சென்ற படகு ஒன்று காணாமல் போயுள்ளது. கடந்த திங்கட்கிழமை பஹாமாஸ் நாட்டின் பிமினி தீவிலிருந்து புறப்பட்ட படகு, 20 பயணிகளுடன் 80 மைல் (130 கிலோமீற்றர்) தொலைவில் தென் அமெரிக்க மாகாணமான புளோரிடாவில் உள்ள **lake Worth** என்ற இடத்துக்கு பயணிக்கத் தொடங்கியது.


ஆனால், அந்தப் படகு துறைமுகத்திற்கு வந்து சேரவே இல்லை என மறுநாள் கடலோர காவல்படைக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அடுத்த மூன்று நாட்களுக்கு இரு நாடும் இணைந்து சுமார் 17,000 சதுர மைல்களுக்கு வான்வழி மற்றும் கடல்வழி தேடலை மேற்கொண்டன. ஆனால் அவர்களது முயற்சி தோல்வியடைய, வெள்ளிக்கிழமை தேடல் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் படகு **'missing'** என அறிவிக்கப்பட்டது. மேலும் காணாமல் போன படகு குறித்து ஏதேனும் தகவல் தெரியவந்தால், கடலோரக் காவல்படைக்கு தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. (ஐ-4)

# இருளடர்ந்த பாதையிலே ஓர் ஒளிக்கீற்று

## பிறேயில் எழுத்து முறை



இன்று உலக பிறேயில் தினமாகும். இந்த இடத்தில் "பிறேயில்" என்றால் என்ன? என்ற வினா எழுவது இயல்பே. இந்த வினாவுக்கான விடை பலருக்குத் தெரிந்திருக்கக்கூடும். இன்னும் பலருக்குத் தெரியாமலிருக்கவும் கூடும்.

பிறேயில் என்பது கண் பார்வையற்றோர் பயன்படுத்துகின்ற ஓர் எழுத்து வடிவமாகும். இது ஒரு மொழியல்ல. எழுத்து வடிவம் மட்டுமே. உலகிலுள்ள திருந்திய மொழிகள் அனைத்தையும் இந்த பிறேயிலில் எழுதமுடியும்.

விழிப்புல வலுவிழந்தோர் கல்வியிலும் கலைகளிலும் உயர்ந்து வாழ்வில் வளங்காண்பதற்கு வழிவகுத்த இந்த அரிய எழுத்து வடிவத்தை உலகுக்குத் தந்தவர் லூயி பிறேயில் என்ற பிரான்ஸ் தேசத்தவராவார். இப் பெருமகனாரின் பிறந்த தினமான ஜனவரி 4 ஆம் திகதியினையே ஐ.நா. சபை உலக பிறேயில் தினமாக 2019 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தியது.

விழிப்புல வலுவிழந்தோர், இவ்வுலகில் சிறப்பாக வாழவழியே இல்லை என்று ஒரு காலமிருந்தது. அக்காலத்தில் அவர்கள் கல்வி வெளிச்சத்துக்கு உட்படாதவர்களாய், கல்வியால் பெறக்கூடிய பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாய்ப் பரிதவித்துக் கொண்டிருந்தனர். இந்த காலகட்டத்தில் தான் லூயி பிறேயிலும் வாழ்ந்தார். ஐந்து வயதிலேயே விபத்தொன்றில் தனது கண்பார்வையை, இழந்த லூயி தன்வீட்டுக்கு அருகாமையிலுள்ள பாடசாலையொன்றில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் எல்லாப் பாடங்களையும் வாய்மொழி மூலமாகவே கற்க வேண்டியிருந்தது. லூயியின் மனம் துயரத்தால் விம்மியது. அந்த வேளையில் தான் அவர் மூளையில் ஒருபொறி தட்டியது.

"என்னையொத்த விழிப்புலனற்றவர்கள் இலகுவாக எழுதவும் வாசிக்கவும் உதவக்கூடிய ஒரு எழுத்து வடிவத்தை நான் ஏன் உருவாக்கக்கூடாது?" என்ற வினா அவர் மனதில் எழுந்தது. நாளாவட்டத்தில் அது வளர்ந்து வலுப்பெற்று விஸ்வரூபமெடுத்தது. அதன் விளைவாகவே "பிறேயில்" என்ற அற்புதமான எழுத்து வடிவம் உலகுக்குக் கிடைத்தது. எனினும், ஆரம்பத்தில், இந்த பிறேயில் வடிவம் யாராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தனது அரிய கண்டுபிடிப்பின் அங்கீகாரத்தைக் காணாமலே லூயி பிறேயில் இறந்துபோனார்.

பல தசாப்தங்களுக்குப் பின்னரே பிறேயில் எழுத்து வடிவம் உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டது. லூயி பிறேயிலும் தேகாந்த நிலையில் "ஓர் உன்னத கண்டுபிடிப்பாளர்" என்ற அந்தஸ்து வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆறு புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட இந்த எழுத்து வடிவமானது அகிலம் முழுவதிலும் அளப்பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. கண்பார்வையற்றவர்கள் சுயமாக எழுதவும் வாசிக்கவும் வழிஏற்பட்டதால் அவர்கள் கல்வி, கலைகளில் உயர்வு காணவும் பற்பல சாதனைகள் படைக்கவும் வழிபிறந்தது. ஹெலன் கெல்லர் போன்ற உன்னத அறிஞர்கள் உருவாவதற்கும், இந்த பிறேயில் எழுத்து வடிவமே துணையாய் அமைந்தது.

இன்றும் விழிப்புல வலுவிழந்தோருக்கான ஒரேயொரு எழுத்து வடிவமாக பிறேயில் மட்டுமே இருந்து வருகின்றது எனினும் கணனி மற்றும் பல இலத்திரனியல் சாதனங்களின் வருகை காரணமாக இன்று பிறேயிலைக் கற்றுக்கொள்கின்ற ஆர்வம் சற்றே குறைந்து வருகின்ற ஒரு போக்கினைத் தற்காலத்தில் அவதானிக்க முடிகின்றது. உண்மையில் இது ஆரோக்கியமானதன்று. விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வி தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பெற்றோர்கள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். விழிப்புல வலுவிழந்த பிள்ளைகள் வலுவானதொரு கல்வி அடித்தளத்தைப் பெற்று வாழ்வில் உயர்வு காண்பதற்கு பிறேயில் எழுத்தறிவு மிக மிக இன்றியமையாதது என்பதை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மறந்து விடலாகாது. இதனை வலியுறுத்தும் வகையிலேயே ஐ.நா. சபை உலக பிறேயில் தினத்தைப் பிரகடனப்படுத்தியது.

தனது ஒப்பற்ற கண்டுபிடிப்பின் மூலம் சமூகத்திலே தீங்குறு நிலையிலிருந்த ஒரு தரப்பினரின் வாழ்வில் ஒளியேற்றிய உன்னத மனிதரான லூயி பிறேயிலை அவரது பிறந்த நாளான இன்று நம்மனங்களிலிருத்தி மதிப்பளித்து நன்றி பாராட்டுவோமாக.

**ஆறுமுகம் ரவீந்திரன்,**
**தலைவர், வாழ்வகம்.**

# புதிய அரசமைப்பு வரைபை சமர்ப்பிக்க அரசு திட்டம்

(கொழும்பு)

புதிய அரசமைப்பு தொடர்பான சட்ட வரைபை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது.

புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவு நகலை முன்வைப்பதற்காக அரச நிபுணர்கள் குழுவொன்றை அமைத்திருந்தது.

மேற்படி குழு பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் பதிவுத் தபால் மூலம் கருத்துக்களைக் கோரியிருந்தது.

பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

இந்தக் குழுவின் யோசனைகள் அடங்கிய வரைவு நகல் எதிர்வரும் மார்ச்சில் அரசிடம் கையளிக்கப்படும்.

அதன்பின்னர் புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, அமைச்சரவை அனுமதி உட்பட சட்டபூர்வமான ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். (ஜ-4)

# நாடு திரும்பக் காத்திருக்கும் 68 ஆயிரம் இலங்கையர்கள்


(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து சுமார் 68 ஆயிரம் இலங்கையர்களை அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சகத்தால் பட்டியலிடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

வெளிநாடுகளின் கொரோனாப் பரவல் காரணமாக நிலைமைகள் மோசமடைந்து வருவதால், அதிக எண்ணிக்கையிலான பணிநீக்கங்கள் மற்றும் வேலையின்மை காரணமாக அங்கிருந்து நாட்டிற்கு வரும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் சென்னை, குவைத், டோஹா, கனடா, சைப்ரஸ் மற்றும் டுபாய் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 400 பயணிகள் அழைத்து வரப்படவுள்ளனர் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# திருகோணமலையில் 160 பேருக்கு தொற்று



(திருமலை)

திருகோணமலை நகரப் பகுதியில் நேற்று 13 தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-4)

# துரித உணவுகளைத் தவிர்க்கவும்

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற வேண்டுமாயின் கொத்து ரொட்டி உள்ளிட்ட துரித உணவுகளை உண்பதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சிலரது உடலில் கொரோனா தொற்றுக்கு எதிராக போராடுவதற்கான நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளதென, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் பீடத்தின் பேராசிரியர் நீலிகா மலாவிகா தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்கள் தேகாரோக்கியத்துடனும் சுகாதார ஆரோக்கியமான உணவுகளையும் விற்றமின் நிறைந்த உணவுகளையும் உட்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# அன்டிஜன் மூலம் 102 தொற்றாளர்கள்

(கொழும்பு)

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறு வோருக்கிடையில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்டு வரும் அன்டிஜன் பரிசோதனை மூலம், இதுவரை 102 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்ல முயன்ற மேலும் ஐவர் , நேற்று முன்தினம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ-4)

# சிவில் நிர்வாகம் முழு இராணுவமயம்

## பேராபத்து என்கிறார் ஹக்கீம்

**(கொழும்பு)**

**நாட்டின் சிவில் நிர்வாகத்துறையானது முழுமையான இராணுவமயமாகின்ற நிலையில் நாடு பேராபத்தை நோக்கிச்சென்றுகொண்டிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.**

கொரோனா விடயங்களை கையாள்வதற்காக மாவட்ட ரீதியாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சி மாற்றம் இடம்பெற்றதன் பின்னரான சூழலில் நாட்டின் சிவில் நிர்வாகத்துறையில் முப்படைகளையும் சேர்ந்த முன்னாள் அதிகாரிகள் பலர் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

நாட்டின் பாதுகாப்புத்துறை தவிர்ந்த வெளிவிவகாரம், சுகாதாரத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அவ்விதமான படை அதிகாரிகள், அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் என்று பல்வேறு பதவிகளில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

நாட்டின் ஜனாதிபதி படை அதிகாரிகளைப் பயன்படுத்தி அனைத்து விடயங்களையும் நடைமுறைச்சாத்தியமாக்கலாம் அல்லது அவர்களுடன் பணியாற்றுவது தனக்கு இலகுவானது என்று கருதமுடியும்.

அதற்காக, சிவில் நிர்வாகத்தில் மேலும் மேலும் படை அதிகாரிகளை இணைத்துக் கொள்கின்றமையாது நாட்டில் படைத்துறையை மையப்படுத்திய நிர்வாகமொன்று விரைவில் ஏற்படும் அபாயத்தினை உருவாக்குவதாக உள்ளது.

விசேடமாக, கொரோனா நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பொறுப்பு, முப்படைகளின் தளபதி தலைமையிலான தேசிய செயலணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் உணர்வுரீதியான விடயங்களில் தொடர்ச்சியாக காண்பிக்கப்படும் பாரபட்சங்களால் அந்த மக்கள் கொதித்துப்போயுள்ள நிலையில்



இராணுவத்தின் ஊடாக அவர்களின் வெளிப்பாடுகளை கட்டுப்படுத்த முனைவதானது மிகத்தவறானதொரு அணுகு முறையாகும்.

அதுமட்டுமன்றி, ஜனநாயக விரோத செயற்பாடுமாகும். எனவே இவ்விதமான சர்வாதிகார இராணுவ ஆட்சியை நோக்கிய போக்கினை உடனடியாக கைவிட வேண்டியது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## எதிர்க்கட்சி போலிப் பிரசாரம்

# ஜி.எஸ்.பி. வரி கிடைக்காவிட்டாலும் பொருளாதாரத்தை முகாமை செய்வோம்

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைக்காது விட்டாலும் நாட்டின் பொருளாதாரத்தினை சிறப்பாக முகாமை செய்வதற்குரிய மூலோபாயங்களைக் கொண்டிருப்பதாக நிதி, மூலதனச்சந்தை, பொது முயற்சியாண்மை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு சுபீட்சமான ஆண்டாக அமையும் என்ற நம்பிக்கையை கொண்டிருக்கும் அதேநேரம், அரசாங்கத்தின் செயற்றிறன்களைக் கண்டு அஞ்சுவதாலேயே எதிர்க்கட்சிகள் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஆண்டு ஜனவரியில் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சுற்றுலா விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது 'ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்யும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வரிச் சலுகையான ஜீ.எஸ்.பி. வரிச் சலுகையை எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு வழங்கப்படும்



என்று உறுதியளிக்கப்பட்டிருக்கின்றது.

இருப்பினும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார அரசாங்கத்தின் வெளிவிவகாரக்கொள்கை மற்றும் உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் ஜனநாயக விரோத அணுகுமுறைகளால் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மீளப் பெறப்படும் அபாயம் இருப்பதாகவும் இதனால் நாட்டில் வறுமை அதிகரிக்கும் நிலைமை ஏற்படும் என்று சுட்டிக்காட்டினார்.

இந்தப் பின்னணியில் ஜி.எஸ்.பி.வரிச்சலுகை தொடர்பில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ-4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2194

### தர்ஷி

வேலை கிடைக்கிற வரைக்கும் வேலை கிடைக்கல்லையே என்று கஷ்டமா இருந்திச்சு



வேலை கிடைச்ச பிறகு வேலைக்கு போறதுக்கே கஷ்டமா இருக்குது..!!

### தரன்

பணம் சம்பாதிக்க ஆயிரம் தொழில் இருக்கு.!



ஆனால் உணவை சம்பாதிக்க விவசாயம் மட்டும் தான் இருக்கு.!

### கவிசனா



மழை வந்தா மட்டும் இல்ல, புயலே அடிச்சாலும், நமக்கு சோறு தான் முக்கியம்.

### பவி



இப்படி எல்லாம் பண்ணுனா கொரோனாக்கு கோபம் வருமா வராத...

### குகன்



கூரை வீட்டில் வசித்தாலும் கடன் இல்லா வாழ்க்கை சொர்க்கமே

### சாலி

கொரோனாவும் பொண்டாட்டியும் ஒன்று தான்...



ஆரம்பத்தில கட்டுக்குள்ள கொண்டு வர முயற்சி பண்ணி அது முடியாம போன பிறகு அதோடு சேர்ந்து வாழ பழகிக் கொள்ளனும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உக்ரைனிலிருந்து சுற்றுலாப்பயணிகளை வரவழைத்தது ஏன்- முஜிபுர் கேள்வி

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் முதல் கொவிட் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நாடான உக்ரைனிலிருந்து சுற்றுலாப்பயணிகள் ஏன் வரவழைக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பினார்.

கொழும்பிலுள்ள எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கொவிட் அச்சுறுத்தலால் கொழும்பில் பல பகுதிகள் சுமார் 2 மாத காலமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு மாதங்களின் பின்னரும் அவற்றை தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்க முடியாத நிலையிலிருந்து கொவிட் கட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளமை தெளிவாகிறது. ஆரம்பகட்டத்திலேயே பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவை அதிகரித்து விரைவில் கொழும்பை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு நாம் வலியுறுத்திய போதும் அரசாங்கம் அதற்கான எவ்வித முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை.

இவ்வாறான நிலைமைக்குள் சுற்றுலாத் துறையை ஆரம்பித்திருக்கிறார்கள். அதன் முதற்கட்டமாக உக்ரையினிலிருந்து சுற்றுலா பிரயாணிகள் வரழைக்கப்பட்டுள்ளனர். ஆனால் உக்ரைன் நாட்டில் பல மில்லியன் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறு அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படும் நாட்டிலிருந்து சுற்றுலாப்பிரயாணிகள் வரழைக்கப்படுகின்றமை முறையற்ற செயற்பாடாகும். அந்நாட்டிலிருந்து வந்தவர்களில் சிலருக்கு தற்போது தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுறுதி செய்யப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பிலும் , அவர்களை தனிமைப்படுத்துவது தொடர்பிலும் அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பதிலாக அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களின் வணிகத்தை மேம்படுத்துவதற்கே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (ஐ-4)

# 40 இலட்சம் ரூபாவை பகிர்ந்தளிக்கவுள்ள ரஞ்சன்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க 40 இலட்சம் ரூபா நிதியை மக்களுக்குப் பகிர்ந்து வழ்ங்கப் போவதாக அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினருக்கான மாதாந்த சம்பளம் மற்றும் பாராளுமன்றத்திற்கு வருகை தருவதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு ஆகியவற்றை பெற்றுக்கொள்ளாமையினால் அந்த நிதி அரச திறைசேரியில் சேர்க்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்திருக்கும் அவர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியுடன் அந்த நிதியை மீளப்பெற்றுத்தருமாறு பாராளுமன்றச் செயலாளரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்த நிலையில் தனது கோரிக்கைக்கு அமைவாக 40 இலட்சம் ரூபா நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டதாகவும், அந்த நிதியை தேவைகள் காணப்படும் மக்களுக்குப் பகிர்ந்து வழங்குவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது பொருளாதார ரீதியில் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் கலைஞர்கள் மற்றும்படையினருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவ்வாறான நிதித்தேவை உள்ளவர்கள் தனது செயலாளருடனோ அல்லது பேஸ்புக் மற்றும் யூடியூப் பக்கங்களின் ஊடாகவோ தன்னுடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)




# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த 10 வருடங்களின் பின்னர் கடந்த வருடம் டெங்கு நோய் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 30 ஆயிரத்து 691 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.



கடந்த வருடத்தில் டெங்கு நோய் தொற்றுக்குள்ளான 35 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "2020 ஆம் ஆண்டில், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையிலும், இறப்புகளின் எண்ணிக்கையிலும் கணிசமான வீழ்ச்சியை காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வருடத்தில் பெப்ரவ்ரி மாதத்தை தவிர்ந்த ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும் போது கடந்த 10 வருடங்களில் பதிவான தொற்றாளர்களை விட குறைவான தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்." என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தமிழ்

உலக நாடுகளை எல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தார் ஒரு அன்பர். அவர் சொன்னார். ஐயா... பிரான்ஸ் நாட்டின் கடைத் தெருவிலே நடக்கின்ற பொழுது பிரான்ஸ் தெரிகின்றது. ஜேர்மன் நாட்டின் கடைத் தெருவில் நடக்கின்ற பொழுது ஜேர்மனி தெரிகின்றது.

ரஷ்யா நாட்டின் கடைத் தெருவில் நடக்கின்ற பொழுது ரஷ்யா தெரிகின்றது.

ஆனால் தமிழ் நாட்டின் கடைத் தெருவில் நடக்கின்ற பொழுது தமிழ் நாடு தெரியவில்லை இங்கிலாந்து தான் தெரிகின்றது என்றார்.

ஏன் அப்படிச் சொல்கின்றீர்கள்.. என்று கேட்டேன். எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆங்கிலத்தில் தானே பெயர் பலகைகள் கண்ணிலே படுகின்றது. தமிழில் யாரும் எழுதி வைப்பதில்லையே என்றார். தலையைக் குனிந்து கொண்டே குனியாதீர்கள்..நிமிருங்கள்..என்றார். நிமிர்ந்தேன்.

பின்பு அவர் பேச ஆரம்பித்தார். அமெரிக்கா போயிருந்தேன். நயாகரா நீர்வீழ்ச்சி பார்த்தேன். அங்கே முகப்பிலே நல்வரவு என்று எழுதியிருந்தது. இங்கே ஏன் தமிழில் எழுதி வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

உலகத்தின் மூத்தமொழி-தமிழ் உயர்ந்த மொழி தமிழ்..உலகத்தின் உயர்ந்த நீர்வீழ்ச்சி நயாகரா..அதனால் அதை இங்கே எழுதி வைத்திருக்கின்றோம்.. என்றார்கள்.

ஜப்பானிய பல்கலைக் கழக வாயில் முகப்பிலே யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கின்ற சங்கத் தமிழ்ப் பாடல் வரியை மொழி பெயர்த்து எழுதி வைத்திருக்கின்றார்களாம். ஜெருசலேம் நகரிலே உள்ள ஓவிய மலையில் கிறிஸ்ததுவக் கோயில் ஒன்றிலே யேசு கற்பித்த வழிபாட்டுக் கருத்து உலகத்திலே உள்ள 68 மொழிகளிலே எழுதப்பட்டிருக்கு.

அதிலே இந்திய மொழிகளில் தமிழ் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றது. புத்தர் தமிழ் படித்தார் என்று மிகப் பழைய வடமொழி நூல் இலலித விசுதாரம் தமிழைப் புகழ்ந்து பேசுகின்றது. என் கல்லறையில் ஒரு தமிழ் படித்த மாணவன் என எழுதி வையுங்கள் என்றார் போப்.

திருக்குறளைப் படிக்க நான் தமிழனாகப் பிறக்க விரும்புகின்றேன் என்றார். இந்தியாவின் தந்தை காந்தியடிகள். இப்படி அவர் சொல்லிக் கொண்டே வந்தார்.

அது சரி..தமிழுக்கு வயது என்ன தெரியுமா? என்றார்.

உடனே நான் கல்தோன்றி..மண் தோன்றா காலத்தில்..முன் தோன்றி..என்று ஆரம்பித்தேன்..ம் உணர்ச்சி பூர்வ மாக பேசாதீர்கள். அறிவு பூர்வமாக பேசுங்கள்..ஏன்றார். நான் அடங்கிப் போய்விட்டேன்.

அப்புறம் சொன்னார். தமிழின் தோற்றம் தோராயமாக கி.மு. 50 000 என தமிழ் வரலாறு என்கின்ற நூலிலே மொழியியல் அறிஞர் பாவாணர் குறிப்பிட்டிருக்கின்றார். இயேசு பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னாடியே தொல்காப்பியம் என்கின்ற இலக்கண நூல் நம்மளிடம் இருந்தது. இயேசு பிறந்து 500 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றிய மொழி ஆங்கிலம்.

தமிழ் மொழி-உலக மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி. அது தோன்றிய இடம் குமரிக் கண்டம். அங்கே இருந்து தான் பல நாடுகளுக்குப் போய்க் குடியேறினார்கள்.

மங்கோலிய சீன மொழிகளுக்கும் தமிழுக்கும் உறவு உண்டு என்கின்றார். கால்டுவெல். இந்தோ ஐரோப்பிய மொழிகளும் தமிழும் நெருங்கியவை என்கின்றார் ஆங்கில அறிஞர் ஜி.யு.போப் அவர்கள்.

ஹங்கேரி-துருக்கி -பின்னிசு. இது மாதிரி பதினொரு பின்னோ-உக்ரியன் மொழிகள் தமிழியேலிருந்து பிறந்தவை என்கின்றார்.. கபோர் செந்த் கொதல் நய். சுமேரிய மொழிக்கும் தமிழக்கும் உள்ள உறவைச் சுட்டிக் காட்டுகின்றார் வோகநாத முத்தரையர். எலாமைட் மொழிக்கும் தமிழுக்கும் தொடர்பு உண்டு என்கின்றார் மக் ஆல் பின். கொரியன் மொழிக்கும் -தமிழுக்கும் உள்ள உறவைச் விளக்கி இருக்கிறார் ஆல் பர்ட். ஜப்பானிய மொழிக்கு தமிழே மூலம் என்கின்றார் ஓனோ. ஆபிரிக்க மொழிகளுக்கும் - தமிழுக்கும் உள்ள உறவை சொல்கிறார் செங்கோர்.

பாசுக்கு மொழி உலகளாவப் பரவிய பண்டைத் தமிழ் மொழியின் ஒரு கூறே- என்கின்றார் இலாகோவாரி. ஆஸ்திரேலியப் பழங்குடிகள் பேசிய மொழிகள் தமிழோடு கொண்டுள்ள உறவை அறியத் தருகிறார் சமன்லால்.. உலகம் சுற்றி வந்த நண்பர் இப்படி நிறையச் செய்திகளைச் சொல்லிக் கொண்டே போனார். அது சரி...ஏன் இப்படி இதை யெல்லாம் என்னிடம் சொல் கின்றீர்கள். என்று கேட்டேன். தமிழ் பேசுகின்றவர்களுக்குத் தமிழ்மொழியைப் பற்றித் தெரிய வேண்டும் இல்லையா..அதற்காக என்றார்.

ஏன் இப்படிச் சொல்கின்றீர்கள்? எங்களுக்குத் தமிழைப் பற்றித் தெரியாதா? என்றேன். அது இருக்கட்டும் உங்களுக்கு 1330 திருக்குறளும் ஒழுங்காக தெரியுமா? என்று கேட்டார். நான் மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டேன். அவர் கேட்கிறதும் நியாயம் தான். அன்றைக்கு ஒரு நாள் ஒரு சின்னப்பை யனைப் பார்த்துக் கேட்டேன். தம்பி..உனக்கு எத்தனை திருக்குறள் தெரியும்? என்றேன். எனக்கு 3000 திருக்குறள் தெரியும்..என்றான். .மொத்தம் இருக்கிறதே 1330 திருக்குறள் தானே 3000 தெரியும் என்கின்றாயே? என்றேன். ஏன் சேர் தமிழ் வளரவே குடாதா? என்று சொல்லிவிட்டு ஓடுகின்றான். இவன் எல்லாம் எந்தக் காலத்தில் வளர்வது?


# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### ஆற்றின் மையக் கோடும் ஆற்றின் ஆழ் மையக் கோடும்




உதாரணமாக அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையை எடுத்தீர்களானால் பகுதிபகுதியாக இந்த நான்கு வகைகளுக்குள் அடங்குவதைக் காணலாம். அமெரிக்கா - கனடா எல்லையை எடுத்தல் திறந்த மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட எல்லைகள் ஆகும். ஷெங்கன் நாடுகளுக்கிடையேயான எல்லைகள் திறந்த எல்லைகள் ஆகும்.

சரி சில வித்தியாசமான எல்லைகளை பார்ப்போம். உலகிலேயே மிக உயரமான எல்லை சீனா விற்கும் நேபாளத்திற்கும் இடையே தான் இயற்கையாக அமைந்த இமயமலைத் தொடர் இருநாடுகளையும் பிரிக்கும் கோடாகத் திகழ்கிறது. இவ் எல்லையைக் கடப்பதானால் இமயலைத்தொடர் ஏறவேண்டும். இந்திய பாகிஸ்தான் எல்லைக்கோடை எடுத்துக்கொள்வோம் இது இரும்பு வலையங்களாலும். ஆயுதம் ஏந்திய இராணுவத்தாலும் நிறைந்திருக்கும். இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் வாகா எல்லையில் இருநாடுகளின் வீரர்கள் கொடியேற்றி கொடியிறக்கும் நிகழ்ச்சி மிகவும் உணர்ச்சிபூர்வமாக இருக்கும். அவ்வளவு சுலபமாக இந்த எல்லையை யாரும் கடந்து விடமுடியாது.

அமெரிக்காவிற்கும் மெக்ஸிகோவிற்கும் இடையே நீண்ட எல்லைக் கோடு உண்டு. அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தின் நாக்கோ நகரையும் மெக்ஸிகோவின் சொனாரா மாநில நாக்கோ நகரையும் எல்லைக்கோடு பிரிக்கிறது. இந்த எல்லைக்கோட்டு கம்பி வேலியை கரப்பந்தாட்ட -வலையாக பயன்படுத்தி இருநாட்டு மக்களும் கைப்பந்து விளையாடுவர், (உரு-1). பிரிக்கும் வேலியை விளையாட்டுக்கு பயன்படுத்தி நட்புடன் மக்கள் விளையாடுவதைப் பார்ப்பதற்கே அதிசயமான விடயம் தான். சரி தாண்ட முடியாத மலை, கட்டுப்பாடான கம்பி வேலிகள் இவை எதுவுமே இல்லாமல் உங்களது இரண்டு கால்களை ஒரே நேரத்தில் இரண்டு நாடுகளில் வைக்க முடியும் என்று சொன்னால் நம்ப முடிகிறதா? நெதர்லாந்து-பெல்ஜியம் எல்லை அப்படித்தான் (உரு-2).

**சீனாவிற்கும் நேபாளத்திற்கும் இடையே இயற்கையாக அமைந்த இமயமலைத்தொடர் இரு நாடுகளையும் பிரிக்கும் கோடாகத் திகழ்கிறது. அமெரிக்கா- மெக்ஸிகோ எல்லைக் கோட்டு கம்பி வேலியை கரப்பந்தாட்ட வலையாக பயன்படுத்தி இருநாட்டு மக்களும் கைப்பந்து விளையாடுகின்றனர். ஒல்லாந்து-பெல்ஜியம் எல்லையில் உங்களது இரண்டு கால்களை ஒரே நேரத்தில் இரண்டு நாடுகளில் வைக்க முடியும்**




அமெரிக்கா-மெக்சிக்கோ எல்லை. இரு நாட்டு மக்களும் இரு பக்கமிருந்து கரப்பந்தாட்டம் விளையாடுவார்கள்

### திறந்த எல்லை (open border)

திறந்த எல்லை என்பது இரு நாடுகளின் அதிகார எல்லைகளுக்கிடையில் மக்கள் குறைவான கட்டுப்பாடுகளுடன் அல்லது கட்டுப்பாடுகளில்லாமல் சுதந்திரமாக சென்று வர உதவுகிறது. இருநாடுகளுக்கு இடையேயான சர்வதேச எல்லைச் சட்டத்தின் காரணமாக ஒரு எல்லை திறந்த எல்லையாக இருக்கலாம். அல்லது சட்டகட்டுப்பாடுகள் இல்லாததால் ஒரு எல்லை திறந்த எல்லையாக இருக்கலாம். அல்லது சட்டத்தை சரியாக நடைமுறைப் டுத்தாத காரணத்தால் அல்லது எல்லையில் போதுமான மேற்பார்வை இல்லாத காரணத்தால் (உதாரணம் இந்தியா, பங்களாதேஷ்) அது ஒரு எல்லை திறந்த எல்லையாக இருக்கலாம். "திறந்த எல்லைகள்" என்ற சொல் மக்கள் நடமாட்டத்திற்கு (சென்றுவர) மட்டுமே பொருந்தும், பொருட்கள் மற்றும் சேவைக்ளுக்கு அல்ல.

### நெதர்லாந்து-பெல்ஜியத்திற்கிடையே விசித்திரமான எல்லை




உரு -2

**இரு நாடுகளுக்கு இடையேயான திறந்த எல்லை என்பது இரு நாடுகளின் அதிகார எல்லைகளுக்கிடையில் மக்கள் குறைவான கட்டுப்பாடுகளுடன் அல்லது கட்டுப்பாடுகளில்லாமல் சுதந்திரமாக சென்று வர உதவுகிறது. நிபந்தனைகளுடன் கூடிய திறந்த எல்லை என்பது மக்கள் சென்று வர குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.**

### நியந்தனைகளுடன் கூடிய திறந்த எல்லை (A conditionally open border)

நிபந்தனைகளுடன் கூடிய திறந்த எல்லை என்பது மக்கள் சென்று வர குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும். பொதுவாக எல்லைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் இந்த சிறப்பு நிபந்தனைகள் சர்வதேச ஒப்பந்தம் அல்லது சர்வதேச சட்டத்தால் வரையறுக்கப் படலாம். நிபந்தனையுடன் திறந்த எல்லை 1951 அகதிகள் மாநாடு அல்லது சர்வதேச சட்டத்தின் பயன்பாடு காரணமாக புகலிடம் கோருவோரின் இயக்கத்தை அனுமதிக்கிறது. இது மக்கள் தங்கள் வாழ்க்கையை நேரடியாக அச்சுறுத்தும் அல்லது குறிப்பிடத்தக்க ஆபத்தில் இருக்கும் சூழ்நிலையிலிருந்து தப்பிக்க எல்லையை கடக்க அனுமதிக்கிறது. மற்றொரு உதாரணம் அயர்லாந்துக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையிலான எல்லை. இரு நாடுகளும் தங்கள் சொந்த குடி மக்களின் கட்டுப்பாடற்ற இயக்கத்தை அனுமதிக்கின்றன. ஆனால் ஐரிஷ் கடல் முழுவதும் இத்தகைய இயக்கத்தை அனுபவிக்க குடிமக்கள் இங்கிலாந்து அல்லது ஐரிஷ் நாட்டவர்கள் என்பதற்கான ஆதாரங்களை துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் வழங்க வேண்டியிருக்கும்.

### கட்டுப்படுத்தப்பட்ட எல்லை (Acontrolled border)

கட்டுப்படுத்தப்பட்ட எல்லை என்பது வெவ்வேறு எல்லைகளுக்கு இடையில் மக்களை நடமாட்டத்தை அனுமதிக்கும் ஒரு எல்லையாகும்.

(தொடரும்...)

## வெடிபொருள் திருட்டு; நால்வர் கைது



(மாவனெல்ல)

மாவனெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள கற்பாறைகளை உடைக்கும் ஒரு இடத்தில் இருந்து பெருமளவு வெடி பொருட்கள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பெராதெனிய பகுதியில் வைத்து குற்றப்புலனாய்வுதிணைக்கள அதிகாரிகளால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்னர். (ஜ-4)

## விவசாயிகளுக்கு நட்ட ஈடு

(கொழும்பு)

சோளப் பயிர்ச்செய்கையில் படைப்புழுத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப் படவுள்ளதாக அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.


நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சோளப்பயிர்ச்செய்கையில் ஐந்து வீதம் படைப்புழுத் தாக்கத்தினால் சேதமடைந்திருக்கிறது.



இம்முறை பெரும்போகத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டெயர் பரப்பில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## ஆலய வழிபாடு ஏன் – எதற்கு – எப்படி



### சங்கடம் தீர்க்கும் சந்நதிகள்

ஆலயத்தில் மூலவரின் திருமேனியில் இருந்து இறை சக்தியை காட்டும் அதிர் வலைகளும் வேத மந்திரங்களும் பீஜாட்சரங்களும் ஒலி, ஒளி கிரகங்களாக எப்போதும் வெளிவந்து கொண்டிருக்கும்.

மிகவும் சக்திவாய்ந்த அந்த அதிர் வலைகள் ஆலயத்தில் ராஜகோபுரம், கருவறை விமானம், துவாரம் பிரகாரங்கள், பலிபீடம், மூலவர் பகுதி, சண்டிகேசுவரர். உள்ளிட்ட 8 இடங்களில் பரவி இருக்கும். இதில் இறை சக்தியை பிரகாரங்களை வலம்வரும் போது பக்தர்கள் மிகமிக எளிதாக பெற முடியும்.

இதற்கு நாம் பிரகாரங்களில் உள்ள ஒவ்வொரு சந்நதி முன்பும் நின்று வழிபாடுகள் செய்ய வேண்டியது அவசியமானதாகும். பழைமையான ஆலயங்களுக்குச் சென்றால் ஒவ்வொரு பிரகா ரங்களிலும் பல கடவுளர்களின் சந்நதிகள் இருப்பதை பார்த்து இருப்பீர்கள்.

ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தில் 29 உப சந்நதிகள் உள்ளன.இவையெல்லாம் சும்மா சாமி கும்பிடுவதற்காக உருவாக்கப்பட்டவை அல்ல. வேண்டுதலை அடைய நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் இந்த சந்நதிகள் தான் நமக்கு உதவும் படி நிலைகளில் முதன்மையானதாக உள்ளது.

சந்நதிகளின் அமைப்பும் பூஜை முறைகளும் ஆலயத்துக்கு ஆலயம் மாறுபடும். சில ஆலயங்களில் சில குறிப்பிட்ட சந்நதிகள் மூலவரையும் விட பிரசித்திப் பெற்றதாகத் திகழும்.

இதற்கு காரணம், அந்த சந்நதிகள் தரும் இறை சக்தியே.

ஒவ்வொரு சந்நதியும் ஒரு குறிப்பிட்ட பலனை தரும் வகையில் நம் முன்னோர்கள் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. உதாரணத்துக்கு நடராஜப் பெருமான் இடைவிடாமல் ஆடிக் கொண்டிருக்கும் சிதம்பரம் தலத்தில் உள்ள சந்நதிகளைப் பார்த்தால் இது புரியும்.

சைவ ஆகமங்கள் நடராஜரை இதயத்துக்கு உரியவராக குறிப்பிடப்படுகின்றன. இதை உணர்த்தும் விதத்தில் சிதம்பரம் நடராஜர் சந்நதியின் கருவறை விமானம் இதய வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. அதுபோல சிதம்பரம் தலத்தில் சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று வடிவங்களில் அருள்பாலிக்கிறார். நடராஜர் திருமேனி உருவமாகும். லிங்கமாக இருக்கும் திருமூலநாதர் அருவுருமாகும். சிதம்பர ரகசியமாக கூறப்படும் வில்வமாலை உள்ள வெட்டவெளி சந்நதி அருவ வடிவமாகும்.

இப்படி இறைவனின் சந்நதிகள் பல விதங்களில் நமக்கு அருள் தருகின்றன. நமது உடம்பு ஒன்றுதான் என்றாலும், உள்ளுக்குள் மூளை, இதயம், நுரையீரல், வயிறு, கிட்னி என்று பல பாகங்கள் இருப்பது போலதான், ஆலயம் ஒன்று என்றாலும் பல சந்நதிகள் உள்ளன.

சங்கடங்களைத் தீர்த்து வைக்கும் ஆற்றல் இந்த சந்நதிகளுக்கு உண்டு. சந்நதிகளில் வழிபாடு செய்யும் போது ஓரமாக நின்று வழிபட வேண்டும். மற்றவர்கள் சாமி தரிசனம் செய்ய முடியாதபடி மறைத்துக் கொண்டு நிற்பது ஆலய ஆகம விதிகளுக்கு எதிரானது.

சந்நதி வழிபாட்டின் மற்றொரு முக்கியமான விஷயம் என்னவெனில், சந்நதி தோறும் தீபம் ஏற்றி வழிபட வேண்டும். தீபம் ஏற்றப்படாத சந்நதிகளில் வழிபடக் கூடாது. இப்படி முறைப்படி வழிபட்டால் சந்நிதியில் உறைந்துள்ள இறைவன் பலன் தருவார். விஷ்ணு புராணம் அல்லது சிவ புராணத்தை ஓதிக் கொண்டே பிரகாரங்களை வலம் வரும்போது சந்நதிகள் வழிபாட்டையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

சிவாலயமாக இருந்தால் மூலவரை வழிபட்டதும் அம்பாள் சந்நதிக்கு சென்று வழிபட வேண்டும். அந்த அம்பாளுக்குரிய பாடலைப் பாடி வழிபடுவது நல்லது. அந்த பாடல் தெரியாதவர்கள் தேவிக்குரிய தோத்திரப் பாடலை பாடி வணங்க வேண்டும். பிறகு உற்சவரை வணங்குதல் வேண்டும். இதையடுத்து கருவறைக் கோஷ்டத்தை வலம் வர வேண்டும்.

(தொடரும்...)

## செய்தித்துளிகள்

## வீதி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதி துவரங்காடு சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து ஹொரவப்பொத்தானை நோக்கிப் பயணித்த கெப் வாகனமும், மொரவெவ பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஆட்டோவும் மோதியதினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் ஆட்டோ சாரதி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

## மாணவர்கள் படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு



(திருமலை)

திருகோணமலை கடற்கரையில் 2006 ஆம் ஆண்டு ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதனை நினைவுகூரும் வகையில் நேற்று முன்தினம் 15 வருட பூர்த்தி நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட செயற்பாட்டாளர் ஸ்ரீஞானேஸ்வரன் தலைமையில் திருகோணமலையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது.

2006.01.02 அன்று இடம்பெற்ற ஐந்து பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடான விசாரணை தேவை என்றும் இதன்போது வலியுறுத்தினர். (ஜ-4)

## தனிமைப்படுத்தலை மீறிய 31 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட்-19 ஆலோசனைகளை பின்பற்றத் தவறியமைக்காக நேற்று நிறைவடைந்த காலப்பகுதியில் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரை மொத்தம் 2,075 பேர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

## தேரருக்கு மன்னிப்பு

(கொழும்பு)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த உவத்தேன்ன சுமன தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளார்.

தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டை அவர் திரும்பப் பெறவேண்டும் என்ற நிபந்தனைக்கு கீழ் இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2010இல் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் ஆதரவாளராக இருந்த சுமன தேரர் ரி 56 துப்பாக்கியை வைத்திருந்தமைக்காக தண்டனை விதிக்கப்பட்டது.


இதேவேளை, 50 கையெறி குண்டுகள் மற்றும் 210 சுற்று வெடிமருந்துகளை வைத்திருந்ததாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. எனினும் பின்னர் அந்தக் குற்றச்சாட்டுகள் திரும்பப்பெறப்பட்டன.

கைதுசெய்யப்படும் போது இவர், கொழும்பின் மாளிகாவத்தையில் உள்ள ஸ்ரீபோதிராஜராம விகாரையின் தலைமை துறவியாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# சிறுவர் அரங்கம்

## மன்னிப்பு



ஒரு புகழ்பெற்ற அரசியல் தலைவர் ஒரு நாள் தன் நாயுடன் வாக்கிங் சென்று கொண்டிருந்தார்.

எதிரே வந்த முல்லா, தலைவரைப் பார்த்து என்ன கழுதை உடன் நடைப் பயிற்சி போய் கொண்டிருக்கிறீர்கள்? என்று கிண்டலாகக் கேட்க தலைவருக்குக் கோபம் வந்து விட்டது.

இது என்னுடைய நாய். உனக்கு கண் சரியாகத் தெரியவில்லையா? என்றார். அதற்கு முல்லா அது நாய் என்று எனக்குத் தெரியும்.

நான் கேள்வி கேட்டது அந்த நாயிடம் என்றார். சிறிது நேரம் கழித்து தலைவருக்கு தன்னைத்தான் கழுதை என்று முல்லா சொல்கிறார் என்பது புத்திக்கு எட்டியது.

எல்லோரும் தன்னை தலைவா என்று மரியாதையுடன் அழைக்கையில், முல்லா தன்னை கழுதை என்று சொல்லியதை எண்ணி வெகுண்டு எழுந்தார்.

முல்லாவின் மீது தலைவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி முல்லா ஒரு புகழ் பெற்ற தலைவரை கழுதை என்றழைத்தது தவறு.

ஆகை யால் அந்தத் தலைவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கினார். முல்லா நீதிபதியிடம் ஒரு சந்தேகம் கேட்கலாமா என்றார்.

நீதிபதி கேளுங்கள் என்றார். ஐயா சட்டத்தில் நான் கழுதையை தலைவா என்றழைப்பதில் ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா? என்று கேட்டார்.

இல்லை என்றார் நீதிபதி.

சரி என்ற முல்லா அந்த தலை வரிடம் சென்று தலைவா என்னை மன்னித்து விடுங்கள் என்று கேட்க நீதிமன்றத்தில் பலத்த சிரிப்பலைகள்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## கலங்க வைத்த கிரானிகஸ் யுத்தம்




கண்ணிமைக்கும் நேரத்தில் பாரசீகப் படைகளுக்கும் மாசிடோனியப் படைகளுக்குமிடையே மோதல் மூண்டது. பாரசீகப் படையினரின் எண்ணிக்கை மிரள வைப்பதாக இருந்தது. சுமார் பத்தாயிரம் ஈட்டிவீரர்கள்.

ஐயாயிரம் குத்தீட்டி வீரர்கள். பத்தாயிரம் குதிரை வீரர்கள். இத்தனை பெரிய படையின் தாக்குதலை எதிர் கொள்வது அத்தனை சுலபமாகத் தெரியவில்லை.

இப்போதைக்குக் கொஞ்சம் பதுங்கலாம். தவறில்லை. யுத்தத்தில் இதுவும் கூட ஒரு நுணுக்கம் தான். தாக்குதல் எதுவும் வேண்டாம். ஆனால் தற்காப்பு அவசியம். அதைச் செய்து கொள்ளுங்கள்.

இடைப்பட்ட நேரத்தில் உங்களுடைய கண்களுக்கும் மூளைக்கும் நிறைய வேலை கொடுங்கள். எதிரிகளின் வியூகத்தை நன்றாகப் பாருங்கள். உற்றுப் பாருங்கள். உள்வாங்கிக் கொள்ளுங்கள். பதிலடி கொடுக்கத் தயாராகிக் கொள்ளுங்கள். பிற்கு தாக்குங்கள். எதிரிகளின் வியூகங்கள் தவிடு பொடியாகிவிடும்.

அலெக்சாண்டரின் ஒவ்வொரு வார்த்தையிலும் பாதுகாப்பும் இருந்தது. வியூகமும் இருந்தது. வெற்றி பெற வைக்கின்ற வித்தைகளும் அதற்குள் புதைந்திருந்தன.

முதலில் அடிவாங்குவதுபோல அமைதியாக இருந்தனர் மாசிடோனிய வீரர்கள். வியூகம் புரிபட்டுப் போனது.

எதிரிகள் எங்கு பலவீனமாக இருக்கிறார்கள் என்று பார்த்தார்கள். இடதுபுறத்தில் செயற்பட்ட காலாட்படை அவ்வளவு பலமாக இல்லை. இதுதான் சமயம் செலுத்துங்கள் படையை. உத்தரவிட்டார் பார்மீனியோ.

சீறிப்பாய்ந்தன படைகள். உடைந்தது வியூகம். வாள்கள் ஒன்றோடொன்று உரசும் சத்தம் அந்த இடத்தையே மிரட்டிக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் இரத்தம், சதை, எலும்பு.

மாசிடோனிய வீரர்கள் கண்களில் அப்படியொரு மூர்க்கம். தாக்குதலிலும் தான். அதிர்ச்சியாக இருந்தது டேரியஸின் வீரர்களுக்கு. ஒவ்வொரு வீரரும் தனிப்படை போல வீறு கொண்டு புறப்பட்டனர். யுத்தம் உச்சக் கட்டத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

(தொடரும்)

சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.
– என்.ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆடறுக்க முதல் ஆணத்துக்கு சட்டியை நீட்டுவதுபோல...

இந்த நாட்டின் நிதியமைச்சராக இருந்த என்.எம்.பெரேரா பொருளியல் துறையில் இரண்டு கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். மிகச்சிறந்த பொருளியலாளர்.

அவர் நிதியமைச்சராக இருந்தபோது உள்நாட்டில் விவசாயத் துறையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவு காண வேண்டும் என விரும்பினார்.

அவரின் சிந்தனை நாட்டுக்குத் தேவையாக இருந்தபோதிலும் அச்சிந்தனை அரங்கேறாமல் தோல்வியில் முடிந்து போனது.

இதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்ந்தால், விவசாய உற்பத்திக்குத் தேவையான கால அவகாசத்தை அவர் கருத்திலெடுக்காமல், எடுத்த எடுப்பிலேயே உணவுப் பொருட்களின் இறக்குமதிகளை நிறுத்தி விட்டமையாகும்.

விதைத்த நெல் விளைய முன் – இருக்கின்ற நெல் மக்களின் நுகர்வுக்குப் போதாத நிலையில், உணவுப் பொருட்களின் இறக்குமதியை நிறுத்திவிட, மக்கள் பசிக்கும் பட்டினிக்கும் ஆளாகினர்.

பாணுக்கும் பருப்புக்கும் வரிசையில் கால் கடுக்கக் காத்து நின்று எதுவும் கிடைக்காத போது, ஆட்சியாளர்களைத் திட்டித் தீர்த்தனர்.

அம்மா! பசிக்குது என்று அழும் பிள்ளையின் பசித் தீயைத் தணிக்க முடியாத துன்பம் என்.எம்.பெரேராவின் சிந்தனையைத் தீயிட்டு எரித்தது.

என்ன செய்வது ஒரு கால அவகாசத்தோடு உள்நாட்டில் விவசாய உற்பத்திகளின் பெருக்கம் கண்டு; இறக்குமதி படிப்படியாகத் தவிர்க்கபட்டிருக்குமாயின், இன்று இலங்கைத் திருநாடு உணவில் தன்னிறைவு அடைந்திருக்கும். விவசாயத் துறை முதனிலையில் இருந்திருக்கும்.

ஆனால் அவை எதுவும் இல்லாமல் போயிற்று. இஃது நம் நாட்டில் தோற்றுப்போன பொருளாதாரச் சிந்தனை பற்றிய சிறு குறிப்பு மட்டுமே.

இவை ஒருபுறமிருக்க, இப்போது மஞ்சளின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டில் மஞ்சளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மஞ்சளின் இறக்குமதியைத் தடுத்து விட,

ஒரு கிலோ மஞ்சள் ஆறாயிரம் தொடக்கம் ஏழாயிரம் ரூபாய் வரையில் விற்பனையாகிறது.

மஞ்சள் மிகச் சிறந்த உணவு மருந்து. இப்போதிருக்கின்ற கொரோனாத் தொற்றுக் காலத்தில் உணவோடு மஞ்சளைச் சேர்ப்பது நல்லது என்று ஆலோசனை கூறப்படுகிறது.

இருந்தும் வீட்டில் ஒரு துண்டு மஞ்சள் இல்லை என்றால் என்ன செய்ய முடியும்.

அந்தோ! சைவாலயங்களில் நடைபெறும் அபிசேகங்களிலும் கிரியைகளிலும் மங்கள நிகழ்வுகளிலும் அபரச் சடங்குகளிலும் முதன்மைப் பொருளாக இருக்கும் மஞ்சள் பொன் விலை என்றானபோது,

மஞ்சளிலும் கலப்படம். கடவுள் எங்ஙனம் கருணை காட்டுவார்.

## தனிச் சிங்களத்தில் வெற்றிச் சான்றிதழ்; ஏற்க மறுத்த கிளிநொச்சி இளைஞர்கள்

(முறிகண்டி)

சிங்கள மொழியில் எழுதப்பட்ட வெற்றிச் சான்றிதழை இளைஞர்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத் தோட்டப்போட்டியில்வெற்றியீட்டிய இளைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் குறித்த சர்ச்சை ஏற்பட்டது.

குறித்த நிகழ்வின் இறுதியில் அமைதியின்மையும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வழங்கப்பட்ட குறித்த வெற்றிச் சான்றிதழ் முழுக்க முழுக்க சிங்கள மொழியிலேயே காணப்பட்டது. இந்நிலையில் குறித்த நிகழ்வின் நிறைவின் பின்னர் அச் சான்றிதழ் தனிச் சிங்கள மொழியில் காணப்பட்டமை தொடர்பில் இளைஞர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் மன்ற உதவிப் பணிப்பாளர் தபேந்திரன் குறிப்பிடுகையில்,

குறித்த சான்றிதழானது அவசர அவசரமாக இளைஞர்களிற்கு வழங்குவதற்காக நேற்று முன்தினம் வரவழைக்கப்பட்டது.

குறித்த சான்றிதழானது இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் உள்ளிட்ட முக்கிய மானவர்களின் ஒப்பத்துடன் வழங்கப்பட்டுள்ளதாகவும், கோவிட் - 19 காலப்பகுதியில் எழுதுவினைஞர் அனைவரும் சிங்கள மொழி எழுதுவினைஞர்கள் மாத்திரமே கடமையில் இருந்துள்ளதாகவும் தமிழ் ஊழியர்களை அழைக்க முடியாது போனமையாலுமே இவ்வாறான சிக்கல் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் மாகாண உதவி பணிப்பாளர் மற்றும் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களின் கையொப்பத்துடன் அவர்களிற்கு தேவையான மொழியில் சான்றிதழ்களை வழங்குமாறு தலைமை காரியாலயத்திலிருந்து அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(ஞா-100)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** தொண்டைமானாறு, கெருடாவில், மயிலியதனை, V.V.T Road, பொக்கணை, சிதம்பரா கல்லூரி V.V.T, கெருடாவில் பாடசாலை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** வலைப்பாடு, வேரவில், கிராஞ்சி, பாலாவி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கொக்கெலியவிலிருந்து ஓமந்தை மற்றும் புதிய பேருந்து தரிப்பிடம் (ஏ9 வீத மி) வரை, தாண்டிக் குளத்திலிருந்து கல்மடு வரை, மறக்காறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, புதுக்குளம் நீர்ப்பாசனம், நொதேர்ண் பாம், ICT மறக்காறம் பளை, தாண்டிக்குளம் நீர்ப்பாசன சபை, கொக்கெலிய இராணுவ முகாம், குடாகச்சக் கொடிய கிராமம், மடுக்கந்தையிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை, குளுமாட்டு சந்தி, அரசடிக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கற்கிடந்தகுளம், கல்மடுவிலிருந்து கீரிசுட்டான் வரை, காக்கையங் குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வவு. விநாயகபுரத்தில் மோ. சைக்கிள் விபத்து

### இருவர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா இராசேந்திரபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 25, 26 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஞா-250)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### எண்ணம் போல வாழ்வு



❖ எண்ணங்களின் பிறப்பிடம் மனம். மனதின் இயக்கத்தை "ஏண்ணம்" என்ற சொல்லால் குறிக்கிறோம். எண்ண ஓட்டத்தை உணர்ந்து, விழிப்புடன் இருந்தால் வாழ்வு உயரும். அறியாமல் அதன் போக்கிற்கு விட்டு விட்டால் வாழ்க்கை தாழ்வடையும்.

❖ எண்ணத்தின் சக்தி அளப்பரியது. அது எங்கும் செல்லும் வலிமை கொண்டது. விழிப்பு நிலையில் இல்லாமல் அலட்சியமாக இருந்தால் அசுத்தமான எண்ணங்கள் நம் மனதை ஆக்கிரமிக்கும்.

❖ தவறான எண்ணங்களில் இருந்து தப்பிக்கும் வழி எப்போதும் மனதை நல்ல விஷயங்களில் செலுத்துவதைத் தவிர வேறில்லை. விருப்பமே இல்லாவிட்டாலும் கூட, நல்லவர்களோடுதான் நாம் பொழுதைக் கழிக்க வேண்டும்.

❖ எண்ணங்களை கையாளத் தொடங்கி விட்டால் எல்லாமே இன்பமயம் தான். பூரணமான அமைதி நிலை பெற்ற மனதில் ஆனந்தம் நிலைத்து நிற்கும். எண்ணமே நம் வாழ்வைச் செதுக்கும் சிற்பியாகும்.

❖ எண்ணங்களைப் பொறுத்தே சொற்கள் அமைகின்றன. எண்ணமும், சொல்லும் ஒன்றுபடும் போது செயல்களும் உயர்ந்தவையாக அமைந்து விடும்.

# சனிப் பெயர்ச்சி பலன்கள்

## 27.12.2020 முதல் 20.12.2023 வரை

## ஜென்ம இராசியில் சனி! சிந்தித்து செயற்பட வேண்டும் இனி!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**மகர இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், 26.12.2020 அன்று உங்கள் ஜென்ம இராசிக்கு வருகின்றார். ஏழரைச்சனியில் விரயச்சனி முடிந்து ஜென்மச்சனி தொடங்கிவிட்டது. மகரம், சனிக்குச் சொந்த வீடு என்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் 'ஆயுள்காரகன்' என்று சொல்லப்படும் சனி பகவான், உங்களுக்கோ, உங்களைச் சார்ந்த குடும்பத்தினர்களுக்கோ உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகளை கொடுத்து நிவர்த்திசெய்வார். திடீர் திடீரென முடிவுகளை மாற்றிக்கொள்வீர்கள். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கலாம்.

மகர இராசியில், ஏற்கனவே நீசம்பெற்ற குரு இருப்பதால் அவரோடு இப்பொழுது சனி சேர்வதால் 'நீச்சபங்க இராஜயோகம்' ஏற்படுகின்றது. மேலும் விரயாதிபதி குரு நீச்சம் பெறுவதும் யோகம் தான். எனவே விரயங்களைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு ஏற்படும். வீடு மாற்றங்கள், இடமாற்றங் கள், உத்தியோக மாற்றங்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**ஜென்மச்சனியின் ஆதிக்கம்**

டிசெம்பர் 26 ஆம் திகதி முதல் உங்கள் இராசியிலேயே சனி சஞ்சரிக்கப் போகின்றார். இந்த ஜென்மச்சனி காலத்தில், திடீர், திடீரென மாற்றங்களும் மனக்குழப்பங்களும் அதிகரிக்கும். எதிர்பார்த்த வகையில் சிலருக்கு ஏமாற்றங்கள் வரலாம். பொல்லாதவர்களை விட்டு விலகி நல்லவர்களோடு இணைந்து செயற்பட்டால் உள்ளம் மகிழும் சம்பவங்களை நிறைய சந்திக்கலாம். இல்லையேல் அல்லல்பட்டு அதற்கு பரிகாரங்களை தேட வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் செயல்களில் குறை கண்டுபிடிப்பர். பணியில் தொய்வு ஏற்படும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் பகை உருவாகலாம்.

**சனியின் பார்வை பலன்கள்**

உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் சனி பகவானின் பார்வை, 3, 7, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. ராசிநாதன் மட்டுமல்லாமல் தனாதிபதியாகவும் சனி விளங்குவதால் அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து அதற்குரிய காரகத்துவத்தைச் சிறப்பாகச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. சகோதரம், வெற்றி, பஞ்சாயத்துக்கள், களத்திரம், குடும்பம், வெளிநாட்டு முயற்சி, தொழில் வளம், பெற்றோர்களின் ஆரோக்கியம் ஆகியவற்றில் எல்லாம் மாற்றங்கள் வரலாம். 3 ஆம் இடத்தை சனி பார்ப்பதால் உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். வழக்குகளில் எதிர்பாராத மாற்றம் உண்டு.

சனியின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால், கல்யாண முயற்சிகளில் ஒருசில தடைகள் இருந்தாலும் கடைசி நேரத்தில் சிறப்பாக முடிந்துவிடும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்களும் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றும் வாய்ப்பு கிடைக்கும். ஏற்றுமதி வணிகம் மற்றும் பங்குச்சந்தையில் ஈடுபட்டிருப்பவர்கள், கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

சனியின் பார்வை பத்தாமிடத்தில் பதிவதால், பெற்றோர்களின் உடல்நலத்தில் கவனம்தேவை. தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்களுடைய பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கக்கூடாது. சகப்பணியாளர்களால் சிறுசிறு தொல்லைகள் ஏற்படலாம். தொழில் நடத்துபவர்களுக்கு போதிய மூலதனம் இல்லாமல் புதிய பங்குதாரர்களைச் சேர்க்க விரும்புவர்.

**சனியின் பாதசாரப் பலன்கள்**

27.12.2020 முதல் 27.12.2021 வரை: சூரியன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த கவனம் தேவைப்




படும். வம்பு வழக்குகள் வாசல் தேடி வரும். அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்காது. அஷ்டமாதிபதியாக சூரியன் விளங்குவதால் எதையும் துணிந்து செய்ய இயலாது. தொடர்கதையாய் கடன் சுமை அதிகரிக்கும். அரசாங்க விரோதங் களும் உண்டு. அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு திடீரெனப் பொறுப்புகள் மாற்றப்படலாம். செய்தொழிலில் கவனம் செலுத்தா விட்டால் ஒவ்வொரு நாளும் இழப்புகளையே சந்திக்க நேரிடும்.

28.12.2021 முதல் 26.1.2023 வரை: சந்திரன் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, கல்யாண முயற்சிகள் கைகூடும். களத்திர ஸ்தானாதிபதியாகச் சந்திர பகவான் விளங்குவதால் குடும்பத்தில் பிரிந்தவர்கள் வந்து சேர வாய்ப்பு உண்டு. வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்ப முடியாமல் தத்தளித்தவர்களுக்கு அதற்கான வாய்ப்பு கைகூடி வரும். வாகனம் வாங்க நினைப் பவர்களுக்கு இக்காலம் உகந்த காலமாகும். வாகன த்தை மாற்ற விரும்புபவர்களுக்கு விலை உயர்ந்த நவ நாகரிக வாகனம் வாங்கி மகிழ்வீர்கள்.

27.1.2023 முதல் 19.12.2023 வரை: செவ்வாய் சாரத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். செல்வந்தர்களின் ஒத்துழைப்போடு திடீர் திருப்பங்களைக் காண்பீர்கள். செல்வநிலை உயரும். 'சேமிப்புக் கரைகிறதே' என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது மகிழ்ச்சி அடைவர். இடம், பூமியால் இலாபம் உண்டு. என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து, அதன் விற்பனை மூலம் வரும் தொகையைக் கொண்டு தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். பெற்றோர் வழியில் ஆதரவு கிடைக்கும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அனுகூலமான நேரம் இது. இக்காலத்தில் கும்பத்தில் சனியும் சஞ்சரிப்பதால் வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

சனிப்பெயர்ச்சி காலத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறப்போகின்றது. கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, தன ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அதிகார பலம் பெற்றவர்களின் ஆதரவோடு நல்ல சந்தர்ப்பங்கள் தேடிவரும். மீனத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோக உயர்வும் எதிர்பார்த்த இட மாற்றமும் கிடைக்கும். மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அர்த்தாஷ்டம குருவாக வருவதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக் கலாம்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

21.3.2022 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மேஷத்தில் ராகுவும் துலாத்தில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். அர்த்தாஷ்டம ராகுவாக வருவதால் ஆரோக்கியத் தொல்லைகள் உண்டு. பொறுமையுடன் செயற்பட வேண்டிய நேரமிது. 10 இல் கேது சஞ்சரிப்பதால் தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு.

8.10.2023 இல் நடைபெறும் ராகு-கேது பெயர்ச்சியின் போது, மீனத்தில் ராகுவும் கன்னியில் கேதுவும் சஞ்சரிப்பார்கள். இந்த காலகட்டத்தில், உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சகோதர சச்சரவுகள் அகலும். நிலுவையில் இருந்த வழக்குகள் சாதகமாக முடியும். கேது பலத்தால் தந்தை வழி உறவில் இருந்த விரிசல் கள் அகலும். ஆன்மிக நாட்டம் அதிகரி க்கும். உடன்பிறந்தவர்கள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர்.

**வெற்றி பெற வைக்கும் வழிபாடு**

சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்வதோடு இல்லத்து பூஜை அறையில் விஸ்வரூப ஆஞ்சநேயர் படம் வைத்து அனுமன் கவசம் பாடி வழிபட்டால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**சனியின் வக்கிர காலம்**

12.5.2021 முதல் 26.9.2021 வரை, 25.5.2022 முதல் 9.10.2022 வரை, 27.6.2023 முதல் 23.10.2023 வரை என மூன்று முறை சனி வக்கிரமடைகிறார்.

இக்காலத்தில் கூடுதல் கவனம் உங்களுக்குத் தேவை. எவ்வளவு விழிப்புணர்ச்சியோடு இருந்தாலும் விரயங்களைச் சந்திக்கும் சூழ்நிலை உருவா



கும். உறவினர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். தொழில் பங்குதாரர்களால் தொல்லை உண்டு. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சச்சரவு ஏற்படும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இந்த சனிப்பெயர்ச்சி விரயச்சனியின் ஆதிக்கம் முடிந்து ஜென்மச் சனியின் ஆதிக்கமாக நடைபெறுகின்றது. ஆரோக்கியப் பாதிப்பு ஏற்படும். வீடு மாற்றங்கள் அல்லது ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அனுசரித்துச்செல்வது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். தாய் மற்றும் உடன்பிறப்புகளையும் அரவணைத்துச் செல்வதே நல்லது. சுபவிரயங்களை அதிகரித்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகள் அதிகரிக்கும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. வழிபாட்டின் மூலமே வளர்ச்சியில் உள்ள தளர்ச்சி அகலும். (தொடரும்)

## ஐ.நாவுக்கு ஒரு...

டியமை தொடர்பாக 3 கட்சிகளிற்குள் ஒரு இணக்கப்பாடு வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா விடயங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி கட்சிகளிற்கிடையிலான ஆலோசனைக் குழு கூட்டம் வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

பொறுப்புக்கூறல் தொடர்பாக மனித உரிமைகள் பேரவையில் எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் அந்த விடயம் ஒரு பூச்சியத்தில் இருக்கும் நிலையில் எதிர்காலத்தில் எவ்வாறான அணுகுமுறைகளை எடுப்பது என்பது தொடர்பாக நேற்று பேசியிருந்தோம். 2012 இலிருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்தவிடயத்தில் ஒரு தெளிவான நிலைப்பாட்டை வலியுறுத்தி வந்திருக்கிறோம். அது தொடர்பிலும் பேசப்பட்டது.

மனித உரிமைகள் விடயத்தில் பொறுப்புக்கூறல் தொடர்பாக கட்சிகள் மட்டத்தில் இருக்கக் கூடிய பலவீனத்தை முழுமையாக விளங்கிக் கொள்ளக்கூடிய அளவிற்கு ஒரு இணக்கப்பாடு வந்திருந்தது.

மேலதிகமாக வடகிழக்கைச் சார்ந்த தமிழ்க்கட்சிகள், சிவில் அமைப்புகள் ஒரு புள்ளியில் சந்திக்கக்கூடிய வகையில் உறுப்பு நாடுகள் மற்றும் மனித உரிமை பேரவை, அதன் ஆணையாளர் ஆகியோருக்கு தெளிவான ஒரு செய்தியை வழங்க வேண்டியமை தொடர்பாகவும் ஒரு இணக்கப்பாடு வந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மேலதிகமாக செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு நானும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிவில் சமூக பிரதிநிதிகளின் அமைப்பும் விக்னேஸ்வரனுடைய அமைப்பு உள்ளிட்ட ஒரு குழு இணைந்து ஒரு புள்ளி என்ற விடயத்தை எழுத்து மூலம் ஆவணப்படுத்துவதற்கு இணங்கியிருக்கிறோம்.

மிகவிரைவில் அது முன்னெடுக்கப்படும். அதனை ஒரு ஆரம்பமாக வைத்து அடுத்த கட்ட சந்திப்புகளை மேற்கொள்வதற்கு நாம் இணங்கியிருக்கிறோம் என்றார். (ஞா-250,299)

## நுணாவிலில்...

பகுதியில் பொலிஸ் நிலையத்தை அண்மித்த ஏ9 வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஹயஸ் வாகனத்தில் பயணித்த நான்கு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து சாவகச்சேரி ஊடாக யாழ்.நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கி வந்த ஹயஸ் வாகனம் நேருக்கு நேர் மோதி இவ் விபத்து சம்பவித்துள்ளது.

மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-30,33)

## இரவு தபால்...

மீள ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்க பிரதான செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதான ரயில் வீதியிலான ரயில் சேவை 64 ஆகவும் கரையோர வீதியிலான ரயில் சேவை 74 ஆகவும் களனி வழிப் பாதையிலான ரயில் சேவை 12 ஆகவும் வடக்கு பாதையிலான ரயில் சேவை 6 ஆகவும் புத்தளம் ரயில் பாதையிலான ரயில் சேவை 26 ஆகவும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தூர பிரதேச ரயில் சேவை தற்போது ஆரம்பிக்கப்பட மாட்டாது.

இரவு தபால் ரயில் சேவை, பொதி விநியோகம் உள்ளிட்ட சேவைகளைப் பாதுகாப்பான முறையில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றார். (ஞா)

## இனந்தெரியாத...

பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத கும்பல் ஒன்று தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத கும்பல் வீட்டின் ஜன்னல், கதவு, கதிரைகள் மற்றும் வீட்டின் முன் கேற் என்பவற்றை அடித்துச் சேதப்படுத்தியதுடன் வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்ட முச்சக்கரவண்டியின் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இது தொடர்பில் குறித்த வீட்டுக்காரரினால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதற்கிணங்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா)

## ஒருவருக்கு...

நேற்று ஞாயிற்றுக்கிழமை 453 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவர்களில் கிளிநொச்சி பொறியியல் பீடத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மாத்திரம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஏனையவர்களுக்குத் தொற்று இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-18,316)

## வடக்கு மீனவர்...

களைச் சேர்ந்த மீனவர்கள் மூவர் இந்திய மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட மீனவர்கள் வேதாரண்யம் கடலோர காவல்படை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதாக தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஞா)

## 2 பேர் பலி...

உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 213 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## வீர வசனம் பேசி...

பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

"இலங்கை இராணுவம் படுகொலைகளில் ஈடுபடவில்லை. போர்க்குற்றங்களை இழைக்கவில்லை. இதை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரிய சாட்சியங்களுடன் இந்தமுறை நிரூபிப்போம். நாம் எதற்கும் அஞ்சமாட்டோம்" என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஆகியோர் அடுத்தடுத்துக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் வினவியபோதே பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதால் அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களை உதாசீனம் செய்யாத வகையில் அரசு நடக்க வேண்டும்.

தீர்மானங்களுக்கான இணை அனுசரணையிலிருந்து ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ தலைமையிலான அரசு விலகியமை மிகவும் தவறான நடவடிக்கையாகும்.

கால அவகாசம் கேட்டாவது தீர்மானங்களின் பரிந்துரைகளை அரசு நிறைவேற்றியிருக்க வேண்டும். அதைவிடுத்து தீர்மானங்களை உதாசீனம் செய்தமையால் மேலும் பல நெருக்குவாரங்களை இலங்கை சந்திக்க வேண்டி வந்துள்ளது.

அதன் ஓர் கட்டமாக இம்முறை புதிய பிரேரணை ஒன்றை இலங்கை சந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது என்றார். (ஞா)

## வரைபு ஒன்றை...

கூட்டத்தில் தமிழர் தரப்பு ஜெனிவா விவகாரத்தை கையாள்வதற்கான வரைபை தயாரிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை உள்ளடக்கிய மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்ட நிலையில் ஜெனிவா கூட்டத்தொடரில் முன்வைக்க வேண்டிய விடயங்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது. இதன்போதே வரைபைத்தயாரிப்பதற்கான குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. (ஞா-250,299)

## முதலாவது...

தொகுதிக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

## 403 பேருக்கு...

கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

இந்நிலையில், கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 774 ஆக உயர்ந்துள்ளது. (ஞா)






















வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (5164)

**CHEMISTRY CLASS**

Tamil & English Medium
Personal or Group Classes
பிரபல தனியார் கல்வி நிறுவன
ஆசிரியரால் இரசாயனவியல்
Theory, Past Paper, Model Paper
Repeat Batch, 2021 Batch &
2022 Batch இற்கு கற்பிக்கப்படும். (5167)

**074 032 4986**

மீண்டும்

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**



அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-1088)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

## இலங்கைக்கு பொருத்தமான

# கொரோனாத் தடுப்பு மருந்தை ஆராய இன்று கூடுகிறது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இலங்கைக்குக் கொண்டுவரக் கூடிய பொருத்தமான கொரோனாத் தடுப்பு மருந்து எது என்பது குறித்து ஆராய்வதற்காக சுகாதார அமைச்சு இன்று விசேட சந்திப்பு ஒன்றை நடத்தி தீர்மானம் எடுக்கவுள்ளது.

தேசிய தடுப்பு மருந்து திட்டத்தினை ஆராய்ந்த பின்னர் சுகாதார அமைச்சு பொருத்தமான மருந்து குறித்த தீர்மானத்தினை எடுக்கவுள்ளது. சுகாதார அமைச்சு தேசிய தடுப்பு மருந்து திட்டம் இன்று கோவிட் 19 மருந்து தொடர்பான தேசிய குழுவிடம் கையளிக்கப்படும் என குழுவின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் பட்டியலில் உள்ள அனைத்து மருந்துகள் குறித்து இலங்கை ஆராய்கின்றது என லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நாங்கள் இது தொடர்பில் ஜனாதிபதி செயலணியொன்றை அமைக்கக் கூடும், நாங்கள் அனைத்து அமைச்சுகள் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் எங்களிற்கு உதவக்கூடிய தூதரகங்களுடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் கொரோனா வைரஸ் மருந்தினை கொண்டு வருவதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். (ஞா)

## கொரோனா தொற்று அதிகரிப்பிற்கு

# அரசின் பொறுப்பற்ற செயலே காரணம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுறுத்திய பாதுகாப்பு அம்சங்களுக்கு புறம்பாக அரசாங்கம் செயற்பட்டு தேவையற்ற விடயங்களுக்கு விளம்பரம் வழங்கியதால் கோவிட் -19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் சுற்று தீவிரமடைந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தின் முதல் சுற்றின் போது சுகாதார தரப்பினர் வலியுறுத்திய பாதுகாப்பு அறிவுறுத்தல்களை மக்கள் முறையாகப் பின்பற்றினார்கள். இதனால் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டது.

கோவிட்-19 வைரஸ் தாக்க சுற்று குறுகிய காலத்துக்குள் தீவிரமடைந்துள்ளது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் அறிவுத்திய பாதுகாப்பு வழிமுறைகளை விடுத்து அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டது.

உள்ளூர் மட்டத்தில் தயாரித்த பாணம் மற்றும் சிகிச்சை முறைமைகளை சுகாதார அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் இலவசமாக விளம்பரம் செய்தார்கள் என்றார். (ஞா)

# விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பித்த இளைஞன் கைது

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளை செலுத்தி விபத்தினை ஏற்படுத்திய இளைஞரை வவுனியா போக்குவரத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

வவுனியா நகர்பகுதியில் இருந்து கோவில்குளம் நோக்கி பயணித்த இலகுரக வாகனம் ஹொறவப்பொத்தானை வீதியால் திரும்ப முற்பட்டபோது பின்னால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வாகனத்துடன் மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் தூக்கி வீசப்பட்ட நிலையில், மோட்டார் சைக்கிளை அந்த பகுதியிலேயே விட்டுவிட்டு தலைமறைவாகியிருந்தார். எனினும் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

(ஞா-299)

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (05.12.2020) சனிக்கிழமை
இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வம்
அமரர்
**கந்தன் பிள்ளையான்**



பிறப்பு 26.04.1940
இறப்பு 05.12.2020
திதி : பஞ்சமி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.01.2021) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச் செய்தியைக் கேள்வியுற்று எங்கள் ஆறாத்துயரில் நேரிலும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள், பத்திரிகை, பதாகைகள் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து நல் உள்ளங்களிற்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5165)

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்

**VN அக்கடமி**

சண்டிலிப்பாய்
தரம் 01 முதல் A/L வரை
புதிய கல்வியாண்டு – 2021
ZOOM ஊடாக
ஆரம்பம் : 04.01.2021
திங்கள் மாலை 3 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
நிர்வாகி : V. கஜரூபன் (5151)
**077 500 5861**

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1051)

0768226240 DHL

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பலாலி வீதி,
கோண்டாவில் சந்தியில்
இருந்து
இருபாலை வீதியில்
3 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக்
கொடுக்கப்படும்.
( பழனி ஆண்டவர் கோவில்
முன்பாக )
(தரகர் தேவையில்லை) (5170)

077 288 0152
077 505 8561
074 075 4204

**வாடகைக்கு**

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில், சாரையடியில்
புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கடை
குடியிருப்புத் தொகுதி வாடகைக்கு உண்டு.
( நீதி நிறுவனங்களுக்கு உகந்தது ) (C-1087)

தொடர்பு : 077 357 5292

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.